
Laodicean Times

லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு 13 தொகுதி 2 ஏப்ரல் - ஜூன் 2023



**R 5504**

# பொல்லாத திராட்சைத் தோட்டக்காரர்கள்

## WICKED VINE-DRESSERS

**“வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்கு தலைக்கல்லாயிற்று” – மத்தேயு 21:42.**

நம் மீட்பர் உவமைகள் மூலமே பிரதானமாக போதித்தார் என்பது மட்டுமல்லாமல், அதோடுகூட அந்த உவமைகள் அனைத்தும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இராஜ்யத்தோடு தொடர்புடையதாக இருந்தன. இதற்கான காரணம் தெளிவாயிருக்கிறது. 6000 ஆண்டுகளாக பாவம் மற்றும் மரணம் ஆளுகை செய்யக் காரணமாயிருக்கிற அந்தகார அதிபதியையும். அவனது ஆளுகையையும் ஜெயங்கொள்ளுவதற்கு, தெய்வீக வல்லமையினால் நீதியின் இராஜ்ஜியத்தை அமைக்க தெய்வீகத்திட்டமானது அழைக்கிறது. இன்றைய பாடம் இராஜ்ஜியத்தைப் பற்றி நேரடியாக சொல்வதில்லையென்றாலும், அதைப் பற்றி மறைமுகமாக குறிப்பிடுகிறது.

ஜீவிக்க தகுதியற்றது என்ற தெய்வீக தண்டனையின் கீழ், இந்த முழு உலகமும் இருள் மற்றும் பாவத்தில் இருந்தபோது, தேவன் இந்த உலகத்தில் வாக்குத்தத்தத்தின் வேரை, ஒரு நம்பிக்கையை விதைத்தார். இந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு ஏற்படுத்தப்பட்டு, அவருடைய வித்து அல்லது சந்ததி இறுதியில் மிக உயர்ந்ததாயும், வல்லமையுள்ளதாகவும் மாறும் என்றும், உலகத்தை புரட்டிப்போடுகிற சாபத்திற்கு பதிலாக, தேவனுடைய ஆசீர்வாதத்தை பூமியில் நிரப்புவதை விளைவிக்கும் என்றும் முன்னறிவித்தது. ஏற்ற சமயத்தில் இந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமின் சுபாவ சந்ததியாகவும், வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகளாகவும் இருக்கிற இஸ்ரயேல் தேசத்திற்கு வந்தது. இவ்வாறாக, தேவன் உலகத்தில் மோசேயின் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலமாக ஒப்பந்தம் செய்த ஒரு திராட்சைத் தோட்டத்தை, அவருக்காக வேலியடைக்கப்பட்டுள்ள ஒரு விசேஷமான மற்றும் விசித்திர ஜனங்களாக, ஒரு தேசமாக யூத தேசத்தை நாட்டினார். அவர்களுக்காக தாமும் இருக்கிறவராக தம்மை வெளிப்படுத்தினார். தேவன் இந்த தேசத்திற்கு ஒரு வேலியை அமைத்து. “எல்லா வழிகளிலும் தெய்வீகக் கிருபையின் விசேஷித்த ஏற்பாடுகளை அவர்களுக்கு வழங்கினார்(ரோமர் 3: 1.2). அந்த தெய்வீக வேலி, தெய்வீக வாக்குத்தத்தமாக இருந்து, இஸ்ரயேலர்கள் தேவனுக்கு உண்மையும் விசுவாசமும் உள்ளவர்களாக இருக்கும்வரை அவர்களின் எதிரிகளிடமிருந்து முழுவதுமாக பாதுகாக்கும்.

அந்நாட்களில் பொதுவானதாக இருந்ததுபோல, அந்த திராட்சத் தோட்டம் ஒரு காவற்கோபுரத்தை உடையதாயிருந்தது. இந்த கோபுரத்திலிருந்து காவற்காரர்கள் கொள்ளையர்களிடமிருந்து இவர்களைப் பாதுகாக்க முடியும். ஆகவே கர்த்தர் தம்மை இஸ்ரயேலின் உயர்ந்த கோபுரமாக அறிவித்தார். அவர் காவலாளிகளை நியமித்தார். சத்தமாக புலம்புகிற மற்றும் மதில் சுவர் உடைக்கப்படும் ஒவ்வொரு தடவையும் அல்லது பிரிக்கப்படுவதைக் குறித்தும் அவ்வப்போது அந்த ஜனங்களை எச்சரிக்கிற தீர்க்கதரிசிகளையும் நியமித்தார். எனவே இஸ்ரயேலர்களின் தரப்பிலான இந்த பாதுகாப்பானது, உண்மையற்ற தன்மை, அலட்சியப்போக்கு, பாவம் ஆகியவற்றினால் மாத்திரமே தகர்க்கப்படமுடியும். கர்த்தர் ஆபிரகாமின் வித்துடன் இந்த ஏற்பாட்டை ஏற்படுத்தின பிறகு, அவர் தூர தேசத்திற்கு போனார் என்ற

## இம்மாத வெளியீட்டில்

. பொல்லாத திராட்சைத் தோட்டக்காரர்கள் .... 1
.. நமது மாபெரும் சுமைதாங்கி .... 5
.. ஆவிக்குரிய இஸ்ரயேலரின் எதிரிகள் .... 8
.. கலியாண விருந்து .... 10
.. தேவனுடைய ஊழியருக்கு புத்திமதிகள் .... 14

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

அறிக்கையானது, அந்த ஏற்பாடு நீண்ட காலத்திற்கு நிற்கும்படி நோக்கங்கொண்டிருந்தது என்பதை சுட்டிக்காட்டுகிறது.

**உண்மையான திராட்சைத்தோட்ட பராமரிப்பாளர்கள்**

இந்த உவமையில் இஸ்ரயேல் தேசம் முழுவதும் திராட்சைத் தோட்டத்தினால் குறிப்பிடப்பட்டிருந்தாலும். தோட்டக்காரர்கள் அல்லது திராட்சைத் தோட்டத்தை பராமரிப்பவர்கள் மதத்தலைவர்களாக இருந்தனர். அவர்களைப்பற்றி இயேசு, "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்" என்று கூறினார்(மத்23 : 2,3). இந்த திராட்சைத் தோட்டக்காரர்கள், இருமாப்புடையவர்களாகி, திராட்சைத்தோட்டத்தில் தனி உரிமையுடைய உரிமைக்காரர்களாக தங்களை எண்ணிக்கொண்டு, வீட்டெஜமானின் ஊழியர்களாக மாத்திரமே இருக்கிறோம் என்றில்லாமல். தங்களை உண்மையான எஜமானர்களாக பாவித்துக்கொண்டனர். அவர்களின் பேச்சிலும் கூட இஸ்ரயேலின் பெருந்திரளான ஜனங்களை சாதாரண பாமர மக்கள் என்றும், தங்களையோ மதத்தலைவர்கள் என்றும் குறிப்பிட பழக்கப்படுத்திக்கொண்டனர். அவர்கள் ஜனங்களை "நம் ஜனங்கள்", "என் ஜனங்கள்" என்று குறிப்பிட்டனர். வேறு வார்த்தையில் கூறுவோமாகில், அவர்கள் தேவனை முறையாக மகிமைப்படுத்துவதற்கு தவறிவிட்டனர். இவ்வாறு தங்களுக்கு கணத்தை எடுத்துக்கொள்வதில் தேவனுடைய ஊழியக்காரர்களைக்காட்டிலும் அதிகமாக தங்களை நினைத்து, அவருடைய திராட்சைத்தோட்டத்தில் தோட்டக்காரர்களாக இருப்பதற்கு அனுமதித்ததில் கணமடைந்தனர்.

பல நூற்றாண்டுகள் கடந்துபோனது, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் செயல்பாடு அந்த ஜனங்கள் மத்தியில் நல்ல பலனை உருவாக்கியிருக்கவேண்டும்... அதாவது, நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிப்பதற்கு தங்கள் திறமையின்மை அல்லது சக்தியின்மையின் மூலம் அவர்கள் குணலட்சணத்தில் பலமாக ஆகியிருக்கவேண்டும்; இந்த ஒன்றுபட்ட அனுபவங்கள் அவர்களை அதிக பயபக்தியுள்ளவர்களாக, தேவனுக்கு அதிக விசுவாசமுள்ளவர்களாக, உரிமைக்காரர் பிரசன்னமாக இருக்கும்போது, அது நேரடியாகவோ அல்லது விசேஷமாக நியமிக்கப்பட்ட சில பிரதிநிதிகள் மூலமாகவோ வந்திருக்கும்போது, நிழலான இராஜ்ஜியம் நிஜமான ஒன்றுக்கு இடமளிக்கவேண்டும் என்ற அதிக ஊக்கமான விருப்பமுள்ளவர்களாக ஆக்கியிருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது முறையானதே. ஏற்ற சமயத்தில், உரிமைக்காரரான யேகோவா தேவன், தம் ஊழியர்களை, அதாவது தீர்க்கதரிசிகளை அனுப்பினார், சிலசமயம் ஒரு செய்தியுடனும், சிலசமயம் வேறு செய்தியுடனும் அனுப்பினார். இந்த ஊழியக்காரர்களும் அவர்களது செய்திகளும் அந்த தோட்டக்காரர்களின் அன்பு, அர்ப்பணிப்பு, மற்றும் விசுவாசம் ஆகியவற்றைக் குறித்த பரீட்சைகளாக மாறியது, மேலும் இஸ்ரயேல் ஜனங்களின் குணலட்சண வளர்ச்சியோடு தொடர்புடைய பரீட்சைகளாகவும் மாறிற்று.

ஆனால் அந்தோ! உரிமையாளரின் பிரதிநிதிகளை மகிழ்ச்சியோடு வரவேற்கவேண்டியவர்கள், ஜனங்களுக்கு மத்தியில் பரிசுத்தத்தின் கனிகளை அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பதற்கு மகிழ்ச்சியடையவேண்டியவர்கள், அந்த ஊழியக்காரர்களை தவறாக நடத்தி, தங்கள் சொந்த விசுவாசமின்மையை காண்பித்தார்கள். அந்த ஊழியக்காரர்களையும் அவர்களுடைய கண்டனத்தையும் ஏற்றுக்கொள்வது என்பது, தாங்கள் வெறும் திராட்சைத்தோட்டக்காரர்கள் என்பதையும், எந்தவிதத்திலும் திராட்சைத் தோட்டத்தின் உரிமையாளர்கள் இல்லை அல்லது. எல்லாரையும் கட்டுப்படுத்துகிற பொதுவான பிரமாணத்தின்கீழ் பொறுப்பேற்காத, விசேஷித்த முன்னுரிமைபெற்ற வகுப்பார் இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளுதலை அர்த்தப்படுத்தும் என்று காரணங்கூறினர். அதற்குள் அவர்களின் பெருமையும் ஜனங்களுக்கு முன்பாக வெளிப்படுத்திக் காண்பிப்பதற்கான அவர்களின் விருப்பமும், உரிமையாளரின் ஊழியக்காரர்களை, தீர்க்கதரிசிகளை தவறாக நடத்த தூண்டியது. உவமை காண்பிக்கிறதுபோல, இந்த ஊழியக்காரர்களில் சிலர் அடிக்கப்பட்டனர், சிலர் கொல்லப்பட்டனர், மற்றவர்கள் கல்லெறியப்பட்டனர்.

**அது கசப்பான திராட்சைப் பழங்களைத் தந்தது**

இறுதியில் திராட்சைத் தோட்டத்தின் உரிமையாளர், நிச்சயமாக தன் மகனுக்கு அவர்கள் பயப்படுவார்கள் என்று கூறி, தன் மகனை அனுப்பினார். உண்மையாக, இஸ்ரயேலரின் அதிகாரிகள் தம் குமாரனை மதிக்கமாட்டார்கள், அவரை சிலுவையில் அறைவார்கள் என்று தேவன் அறிந்திருந்தார் என்றும், அவர்களுடைய உள்ளுணர்வினை முன்னறிந்தே தம் குமாரனை அவர் அனுப்பினார் என்றும் வேதம் நமக்கு அறிவிக்கிறது.

ஆனால் அவர்கள் என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று உரிமையாளர் கூறியிருந்ததுபோல அவர் சொல்லியிருந்தாலும், அந்த உவமை ஒரு வேறுபட்ட நிலைப்பாட்டிலிருந்து அந்த விஷயத்தைத் தெரிவிக்கிறது. நிச்சயமாக யூதர்களின் ஆட்சியாளர்கள் பரிபூரணமான ஒருவருக்கு – அதாவது,''பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமானவருக்கு'' பயபக்தியைக் காண்பித்திருக்கவேண்டும். ''அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை'' என்று ஜனங்கள் யாரைப்பற்றி அறிவித்தார்களோ, அந்த ஒருவரை யூத ஆட்சியாளர்கள் நிச்சயமாக அங்கீகரித்திருக்கவேண்டும். நிச்சயமாக அவர்கள் அவருடைய செய்திக்கு செவிமடுத்திருக்கவேண்டும். தங்கள் பாவங்களுக்கு மனம் வருந்தியிருக்கவேண்டும். அவர் மூலமாக பிதாவினுடனான இசைவிற்கு திரும்பவும் வந்திருக்கவேண்டும். இவ்வாறு மன்னிப்பையும், ஒரு ஆசீர்வாதத்தையும் பெற்றிருக்கவேண்டும். ஏசாயா, எரேமியா, ஆபகூக், மல்கியா மற்றும் பிற தீர்க்கதரிசிகள் வஞ்சித்தவர்களாக இருந்தார்கள் என்று அவர்கள் நினைக்கிறதற்கு என்ன காரணங்கள் காணப்பட்டாலும், அந்த வாதங்களில் எதுவும் உரிமையாளரின் குமாரனுக்கு எதிராக நிற்கவில்லை – அவருடைய பரிசுத்தத்திலும், அவருடைய அற்புதங்கள் மற்றும் வல்லமையுள்ள வேலைகளிலும், அவருடைய வல்லமையுள்ள ஜீவ வார்த்தைகளிலும் நம்பிக்கைக்குரிய சாட்சியங்களை அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

இருப்பினும் சுயநலம் மற்றும் தற்பெருமையின் ஆவி வல்லமையுள்ளதாயிருந்து, அதைப் பெற்றுள்ளவர்கள் பிற்பாடு அவர்களையே அச்சுறுத்துகிற கொடூரமான செயல்களைச் செய்வதற்கு பெரும்பாலும் வழிநடத்துகிறது. அக்காலத்தின் யூத வேதபாரகர்கள் மற்றும் மதத்தலைவர்கள், தேவனுடைய குமாரனும், திராட்சைத்தோட்டத்தின் உரிமையாளரின் பிரதிநிதியுமாயிருக்கிற இயேசு, தம்முடைய வார்த்தைகளினாலும், செயல்களினாலும் ஜனங்கள்மீது ஒரு வல்லமையுள்ள செல்வாக்கை செலுத்தினார் என்பதைப் புரிந்துகொண்டனர். உரிமையாளரின் குமாரன் என்ற அவருடைய உரிமைகோரல், ஜனங்கள் அடையாளங்காணக்கூடிய எண்ணற்ற அறிகுறிகளால் ஆதரிக்கப்பட்டிருந்தது. அவரை இராஜாவாக்க ஜனங்கள் பலவந்தமாக அழைத்தபோது, அவர் தனியாக ஒரு மலைக்கு ஓடிப்போனார் என்று வாசிக்கிறோம். அவருடைய நோக்கம் மேலோங்கக்கூடிய அளவிற்கு, ஜனங்கள் மீதான மதகுரு வகுப்பாரின் அதிகாரம், அவர்களின் செல்வாக்கு, பட்டங்கள், மனிதர்களிடத்திலான அவர்களுடைய மரியாதை ஆகியவை முக்கியத்துவத்தில் குறைந்துவிடும் என்று அவர்கள் யோசனை பண்ணினார்கள்.

**“இதோ அடக்குமுறை –– இதோ கூக்குரல்”**

இயேசுவின் விளக்கத்தினால் காண்பிக்கப்பட்ட திராட்சைத் தோட்டத்தின் ஆட்சியாளர்கள் பரிசேயரும் சதுசேயருமாக இருந்தார்கள். அந்த திராட்சைத்தோட்டம் மகிமைப்படுத்தப்படுதல் மற்றும் முழு உலகத்திலும் அதன் செல்வாக்கை விரிவுபடுத்துல் ஆகியவற்றிற்கான மாபெரும் ஆசீர்வாதங்கள் மற்றும் அதிகாரத்துடன் மேசியாவை அந்த இராஜா இறுதியில் அனுப்புவார் என்ற தீர்க்கதரிசிகளின் அறிவிப்பைப் பொறுத்தவரை மிகவும் விசுவாசமில்லாதவர்களாக ஆகினர். ஒரு வகுப்பாராக அநேக வேதபாரகர்களை உள்ளடக்கியிருந்த சதுசேயர்களோ அஞ்ஞானிகள் வகுப்பாராயிருந்தனர். வாக்குத்தத்தங்கள் மற்றும் தீர்க்கதரிசனங்களின் உத்வேகத்தில் அவநம்பிக்கை உள்ளவர்களாக இருந்தனர். ஒரு கணிசமான அளவு அதே ஆவி பரிசேயர்களையும் பாதித்தது. எல்லாரும் சுயத்தை தேடுகிறவர்களாக இருந்தனர். பணத்தை நேசிக்கிறவர்கள் என்று இயேசு அவர்களை தம் பாணியில் கூறுகிறார். மேலும் அவர்கள் தேவனிடத்திலிருந்து மாத்திரம் வருகிற கணத்தைத் தேடுவதைக்காட்டிலும், மனிதர்களின் கணத்தை முதன்மையாகத் தேடுகிறார்கள் என்றும் அறிவித்தார்.

இயேசுவுக்கு எதிரான அவர்களுடைய பெரும் எரிச்சலில், அவருடைய வெற்றி என்பதன் அர்த்தம், அவர்களின் தோல்வி என்றும், அவர்களின் ஞானத்தையும் போதனைகளையும் குறிப்பிடுகிற எல்லா நிறுவனங்களின் தோல்வி என்று அவர்கள் உணர்ந்திருந்து, இயேசு மரிக்கவேண்டியது அவசியமானது என்று அவர்கள் தீர்மானித்தனர். அவருடைய மரணம் அவர்களுடைய கோட்பாடுகள் மற்றும் திட்டங்களின் வெற்றிக்கு அவசியமாயிருக்கிறது என்பதை இதன்மூலம் அவர்கள் அர்த்தப்படுத்தினர். ஏனென்றால் அவருடைய கோட்பாடுகளும் போதனைகளும் அவர்களுடையவற்றிலிருந்து மிகவும் வேறுபட்டதாயிருந்தன. தேவனுடைய வார்த்தையை ஒன்றுமில்லாததாக்கி, மனிதப் பாரம்பரியங்களிலிருந்து தாங்கள் மிகவும் கடினப்பட்டு உழைத்து கட்டியமைத்த மாபெரும் நிறுவனங்களெல்லாம் மறைந்து போய்விடும் என்ற கருத்தை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தங்களுடைய திட்டங்களை இயேசுவிடம் ஒப்படைப்பதும், அவர் பிரசங்கித்த திட்டங்களை அவருக்காக எடுத்துச்சொல்வதும், திராட்சத்தோட்டமாகிய

அந்த தேசத்தின் அழிவை அர்த்தப்படுத்தும் என்று அவர்களுக்குத் தோன்றினது. அவர்கள் எடுத்துள்ள செயல்முறை அந்த நிழலான திராட்சைத் தோட்டமாகிய நிழலான இராஜ்ஜியத்தின் அழிவுக்கு வழிநடத்தக்கூடிய ஒன்றாக இருந்தது என்பதை அவர்கள் உணரவில்லை.

இயேசு இந்த உவமையை தம் சொந்த நேரம் இருக்கும்வரைக்கும் எடுத்துச்சென்று, தம் சொந்த கொடூரமான மரணம், கர்த்தருடைய சுதந்திரத்தை தங்களுக்கு சொந்தமானதுபோல நினைத்து நடந்த, பொல்லாத திராட்சைத்தோட்டக்காரரின் கைகளிலிருக்கிறது என்று முன்னறிவித்தார். பின்னர் இயேசு தம் வார்த்தைகளைக் கேட்டவர்களிடம் முடிவுரையாக; திராட்சைத் தோட்டத்தின் உரிமைக்காரர் உரிமையை எடுத்துக்கொள்வதற்கும், தவற்றை நிவர்த்தி செய்யவும் வரும்போது, அந்த பொல்லாத தோட்டக்காரர்களுக்கு என்னசெய்யவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என கேட்டார். அந்த பொல்லாத திராட்சைத் தோட்டக்காரர்களை பரிதாபமாக அழித்து, ஏற்றகாலத்தில் ஏற்ற கனிகளை கொடுக்கிற வேறே தோட்டக்காரர்களுக்கு தன் திராட்சைத் தோட்டத்தைக் கொடுப்பார் என்பதே அதற்கு பதிலாக இருந்தது.

இயேசு தாமே இந்த பதிலைக் கொடுக்கவில்லை, மாறாக, அவருடைய மௌனம் அந்த ஜனங்களின் பதிலுக்கு உறுதிதருவதாக இருந்தது. அப்படியாகவே அந்த உவமை நிறைவேறியது. தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கள் யூத தேசத்தின்மீது வந்தன. அதன்விளைவு, அந்த தேசம் கிபி 70ஆம் வருஷத்தில் முற்றிலுமாக தூக்கி எறியப்பட்டது. இதைப்பற்றிப் பேசுகையில் அப்.பவுல், ''அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாக வந்திருக்கிறது'' (1தெச2:16) என்று கூறுகிறார். அதன்படி அவர்களைப்பற்றி நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளாலும் எழுதப்பட்டவைகள் எல்லாம் நிறைவேறித்தீரவேண்டும். அவர்களின் தேசியம் முற்றிலும் தூக்கியெறியப்பட்டது. அதிலிருந்து அது ஒருபோதும் மீட்டெடுக்கப்படவில்லை. தீர்க்கதரிசிகளினால் கூறப்பட்ட காலம் வரும்வரை, அதாவது மகிமையிலிருக்கும் மேசியா தமது நீதியுள்ள ஆளுகையை நிறுவும்போது, அவருடைய இராஜ்ஜியத்தின்கீழ், அடிக்கப்பட்ட, கல்லெறியுண்டு கொல்லப்பட்ட அந்த உண்மையுள்ள ஊழியக்காரர்கள், தீர்க்கதரிசிகள், அவருடைய கூட்டாளிகளாக ஆக்கப்பட்டு, அங்கீகாரமும் அதிகாரமும் கொடுக்கப்பட்டு, இந்த பூமியில் மேசியாவின் பிரதிநிதிகளாக ஆக்கப்படுவார்கள் (சங்45 :16).

**புதிய திராட்சைத் தோட்டக்காரர்கள்**

உண்மையாக நியமிக்கப்பட்டவர்கள் பொல்லாத தோட்டக்காரர்களாக இருந்தனர் என்று கர்த்தர் கூறினார். அவர் புதிய திராட்சைத் தோட்டக்காரர்களை நியமித்தார். அவர்கள் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், அதில் அப்.பவுல், யூதாஸின்இடத்தை எடுத்துக்கொண்டார். மேலும் அவர் ஒரு புதிய திராட்சைத் தோட்டத்தைத் துவக்கி, அதில் விசுவாசம் மற்றும் தேவனிடத்திலான உண்மைத்தன்மையுடன் ஏவப்பட்ட உண்மையான திராட்சைகளையே அதற்குள் வைத்தார். அந்த உண்மையுள்ள ஊழியக்காரர்கள், நீண்ட நாட்களுக்கு முன்பே நித்திரையடைந்திருந்தாலும், கர்த்தருடைய உண்மையான திராட்சைச் செடியாகிய சபையை, கிறிஸ்துவின் சரீரத்தை ஆதிக்கம் செலுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும், தங்கள் வார்த்தைகள் மற்றும் போதனைகள் மூலமாக தொடர்ந்து வேலைசெய்துவருகின்றனர். இந்த திராட்சைத் தோட்டத்தைப்பற்றி நம் கர்த்தர், ''நானே மெய்யான திராட்சைச் செடி; நீங்கள் கிளைகள்'' என்று அறிவிக்கிறார். நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இந்த மெய்யான திராட்சைச் செடியின் உண்மையான இந்தக் கிளைகள் தங்கள் எஜமானுடன் மரணபரியந்தமான ஞானஸ்நானத்தின் மூலம் நடப்பட்டிருந்து,, நீதியின் சமாதான கனிகளைக் கொண்டு வந்துள்ளன, நீண்டகாலமாக இந்த கனிகள் எல்லாம் ஒன்றுசேர்க்கப்பட்டு, உயிர்த்தெழுதலின் ''மாற்றத்தால்'' பரலோக நிலைமைக்கு மாற்றம் செய்யப்படும்.

இருப்பினும். இதற்கிடையில், யூத யுகத்தின் திராட்சைத் தோட்டக்காரர்களால் வெளிப்படுத்தப்பட்ட அதேஆவி, மறுபடியும் தன்னை வெளிப்படுத்தியது. மற்ற திராட்சைத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எண்ணிக்கையிலும் வளத்திலும் செல்வாக்கிலும் இவை கர்த்தர் விரும்புகிற விலையேறப்பெற்ற கனிகளை மாத்திரமே தருகிற, கர்த்ருடைய திராட்சைத் தோட்டத்தை முற்றிலும் விஞ்சி மிளிர்கிறதாக இருந்தன. வேதத்தில் இரண்டு திராட்சைச் செடிகள் பற்றி பேசப்பட்டுள்ளது. ஒன்று ''என் பிதாவின் வலதுகரம் நாட்டின திராட்சைச் செடி'', மற்றொன்று ''பூமியின் திராட்சைச் செடிகள்'' என்று பெயரிடப்பட்டுள்ளது, ஒன்றின் கனி. மரணபரியந்தமான உண்மைத்தன்மையில், கிறிஸ்தவ குணச்சாயலை வெளிப்படுத்துகின்றது. மற்றொன்றின் கனியானது, தற்புகழ்ச்சி, பெருமை மற்றும் வெளிவேஷம் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்படுகிறது... அதாவது, தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறதில் வெளிப்படுத்தப்படுகிறது.

எஜமானரின் இரண்டாம் வருகையில் பூமியின் திராட்சைச் செடியின் கனிகளை கூட்டிச்சேர்த்தல் அங்கு

இருக்கும். உலகத்தின் மேம்பாட்டிற்கான மேசியாவின் இராஜ்ஜியத்தில்1000 வருடங்களுக்கு இடங்கொடுத்து, இந்த யுகம் கடந்துபோகக்கூடிய மகா உபத்திரவக் காலத்தில் தேவ கோபாக்கினையாகிய திராட்சை ஆலையில் இது கையாளப்பட இருக்கிறது.

**முதன்மையான மூலைக்கல்**

கிறிஸ்துவின் சபை பிரமிடு மூலம் குறிப்பிடப்பட்டு, அது 5 மூலைக்கற்களையும், அதில் முதன்மையானது தலைக்கல்லாக இருக்கிறதும்... அதாவது ஒரு பூரண பிரமிட்டை, அதன் முழு அமைப்பையும் கட்டுப்படுத்துகிற (கோடுகளை) நிலைகளைஅதற்குள்ளேயே வைத்திருக்கிற கல்லை தலைக்கல்லாக கொண்டுள்ளது என்ற கருத்தை வேத வசனங்கள் நமக்குக் கொடுக்கிறது. யூதர்களால் புறக்கணிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே சபையாயிருக்கிற தேவனுடைய இந்த மாபெரும் ஆலயத்தின் முதன்மையான மூலைக்கல்லாக இருக்கிறார். அவர் ஏற்கனவே மகிமைப்படுத்தப்பட்டுவிட்டார். இந்த யுகத்தின்போது, அவரது அடிச்சுவடுகளை பின்பற்றுகிறவர்கள், அவரது குணசாயலுக்கு இசைவாக வடிவமைக்கப்படுகிறவர்கள் பரலோக மகிமையில் அவருடன் ஒன்றிணைக்கப்பட தயார்ப்படுத்தப்படுகின்றனர்.

இப்படியாக, நம் கர்த்தர் அறிவித்ததைப்போல, தேவனுடைய இராஜ்ஜியமானது... ஆபிரகாமின் சுபாவ வித்தாயிருக்கிற இஸ்ரயேலிலிருந்து எடுக்கப்பட்டு, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு கொடுக்கப்படும். தேவன் இவ்வாறு, ஒரு பரிசுத்த ஜாதியை, ஒரு விசேஷித்த ஜனங்களை, மற்ற எல்லாரிடமிருந்து பிரிக்கப்பட்டு வேறுபடுத்தப்பட்ட ஜனங்களை, யூதர்களிடத்திலிருந்தும் புறஜாதிகளிடத்திலிருந்தும், அடிமைகளிலிருந்தும், சுயாதீனர்களிடமிருந்தும், ஒவ்வொரு தேசத்திலிருந்தும், சபைப்பிரிவுகளிலிருந்தும், ஒரு புதிய தேசத்தை வளர்ச்சியடையச்செய்கிறார் அல்லது உருவாக்கி வருகிறார்,

கிறிஸ்துஇயேசு, தலைக்கல்லாக அநேகருக்கு உண்மையில் ‘‘ஒரு தடுக்கலின் கல்லாக இருக்கிறார்’’ அவர்கள் அவர்மீது தடுமாறி, தங்களை காயப்படுத்திக்கொள்கின்றனர். ஆனால் அவர்களை குற்றப்படுத்தும் அர்த்தத்தில் அவர் அவர்கள்மீது விழுவாரென்றால், அது அவர்களின் முற்றிலுமான அழிவை அடையாளப்படுத்தும், இரண்டாம் மரணத்தில் அவர்கள் துண்டிக்கப்படுதலை அடையாளப்படுத்தும்.

பிரதான ஆசாரியர்களும் பரிசேயர்களும் எஜமானரின் உவமைகளைக் கேட்டு, பொல்லாத திராட்சைத் தோட்டக்காரர்களாக அவர் தங்களைப்பற்றியே பேசினார் என்று உணர்ந்தனர். அவர்கள் அவரைப் பிடித்து உடனடியாக அழிப்பதற்குத் தேடினர், ஆனால் அவர்கள் ஜனக்கூட்டத்தைக் கண்டு பயந்தார்கள். அந்த ஜனங்கள் அவரை தேவனுடைய குமாரனாக அடையாளம் காணாதபோதிலும், அவரை பெரிய தீர்க்கதரிசி அல்லது போதகர் என்று மதிப்பிட்டனர்.

---------

**R 5508**

# நமது மாபெரும் சுமை தாங்கி
## OUR GREAT BURDEN-BEARER

**“அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால். உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்” – 1பேதுரு 2:7.**

அப்போஸ்தலர் பேதுரு தேற்றுதலாக அளிக்கும் இவ்வார்த்தைகள் கிறிஸ்துவின் சபைக்கு முகவரியிடப்பட்டுள்ளன. வாழ்க்கையின் சிரமங்களும் கவலைகளும் நமது பங்காக இருந்து, அவை நம்மை பேதலிக்கச்செய்கிறதை கர்த்தருடைய ஜனங்களாயிருக்கிற அனைவரும் நிச்சயமாக உணர்வார்கள். இந்த வாழ்க்கையின் கவலைகள் உலகிலிருக்கிறவர்களுக்கும், சிலருக்கு அதிகமாகவும் சிலருக்கு குறைவாகவும் வருகின்றது, ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் எல்லாருக்கும் அவைகள் நிச்சயமாய் வருகின்றன.

கவலை(care) என்ற வார்த்தை இரு வேறுபட்ட வழிகளில் உபயோகிக்கப்படுகிறது, சரியான கருத்தை நடைமுறைப்படுத்தும் உணர்வில் இவ்வார்த்தையை சிந்திக்கும்போது, நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவற்றில் சரியான கவனம் செலுத்தவும் அல்லது நாம் பொறுப்பாளிகளாக இருக்கவேண்டியதைக் குறித்தும், நாம் நமது திறவுகோல் வசனத்தை தவறாகப் புரிந்துகொள்ளும் அபாயத்தில் இருக்கிறோம். ஆயினும் அநேக சமயங்களில் கவலை(care) என்ற இவ்வார்த்தை துயரப்படுதல், மனக்கஷ்டம் என்ற கருத்தையே கொண்டிருந்து, இவ்விடத்திலும் இதே கருத்தையே அப்போஸ்தலர் உபயோகித்திருக்கிறார். அப்போஸ்தலர் பவுலும், ‘‘ நீங்கள் எதற்கும் கவலைப்படாதிருங்கள்...’’ என்கிறார். அதாவது, எதைக்குறித்தும் துயரப்படவோ, எதற்கும் கவலை கொள்ளவோ வேண்டாம் என்கிறார். ஆகவே, ‘‘அவர் உங்களைக்குறித்து சிந்தையாயிருக்கிறபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்’’ என்ற பரிசுத்த பேதுருவின் வார்த்தைகளை நாம் கொடுக்கிறோம்

**சிறு காரியங்களின் முக்கியத்துவம்**

நமது பொறுப்புணர்வுகளையெல்லாம் தூக்கியெறியவேண்டும், நாம் என்னசெய்கிறோமோ அதிலும் நமக்கான பணிகள் மற்றும் கடமைகளிலும் கவனமாயிருப்பதை நிறுத்தவேண்டும் என்பது அப்போஸ்தலரின் ஆலோசனையல்ல. எந்த ஆணோ அல்லது பெண்ணோ எதற்கும் கவலையின்றி இருப்பது என்ற சரியான உணர்வின்படி பார்க்கும்போது, அவர்கள் வாழ்வின் எந்த ஸ்தானத்துக்கும் தகுதியற்றவர்களாயிருப்பர் என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்வோம். சிலர், போதுமானஅளவு கவலையாயிருப்பதில்லை அல்லது அக்கறைகொள்வதில்லை என்பதற்கான சாட்சியங்களை நாம் அநேகந்தடவை கவனித்திருப்போம். ஒருவேளை வீட்டின் சுவர் சிதைந்திருக்கலாம் அல்லது மரச்சாமான்கள் கீறப்பட்டிருக்கலாம் அல்லது கதவுகள் அடைக்கப்படமுடியாமலிருக்கலாம் அல்லது சிரமப்பட்டு கதவு அடைக்க நேரிடலாம், அல்லது கதவு ஊசலாடும் நிலையிலிருக்கலாம். ஓ! இவையெல்லாம் அற்பக் காரியங்கள் என்று சிலர் கூறக்கூடும்! ஆனால் இவ்விஷயங்களில் கவனக்குறைவாக, சிந்தனையற்று, அலட்சியமாயிருப்பவர் பெரிய காரியங்களிலும் நம்பிக்கைக்குரியவரல்ல,

தனிப்பட்டவிதத்தில் இக்காரியங்களைக் காண்பது நமக்கு வலியை ஏற்படுத்தும். சரியான அக்கறையை பிரயோகிப்பவர்கள் அனைவருக்கும் அவ்வாறே சந்தேகத்திற்கிடமின்றி வலியை உண்டாக்கும். சகோதரர்களாயிருந்தாலும், உலகின் ஜனங்களாயிருந்தாலும் உலகில் முட்டாள்தனமாக தவறு செய்பவர்களாகவோ அல்லது தேவையில்லாமல் பிறருக்கு எரிச்சலூட்டுபவர்களாகவோ, மனுஷருக்கு முன்பாக அவருடைய பிரதிநிதிகளாயிருக்கின்ற தேவனுடைய பிள்ளைகள் நடக்கக்கூடாது. சிறிய விஷயங்கள் என்று அழைக்கப்படுபவற்றில் கவனக்குறைவாக இருப்பதனால், நன்மைக்கான நமது செல்வாக்கு பெரிதும் சிதைக்கப்படலாம். ஆனால் நிஜத்தில் அப்படி இல்லை, அர்த்தம் நிறைந்த ஒரு பழமொழி கூறுகிறது; "அற்ப விஷயங்கள் பூரணத்தை ஏற்படுத்தும், பரிபூரணமானது அற்பமானதல்ல". கர்த்தருடைய ஜனங்கள் உலகில் மிகவும் கவனமுள்ளோராய் இருக்கவேண்டும்.

நம் கர்த்தர் கூறினார்; "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்"(லூக்கா 16:10) இதன் தலைகீழான வாக்கியமும் அதே அளவில் உண்மையுள்ளது; "கொஞ்சத்திலே உண்மையில்லாதவன், அநேகத்திலும் உண்மையில்லாதவனாயிருக்கிறான்" . பெரிய விஷயங்களில் காணப்படுகிறதைக் காட்டிலும், அன்றாட வாழ்வின் இந்த சிறு விஷயங்கள் நிஜ குணாதிசயத்துக்கான அதிக கடுமையான பரீட்சைகளாக நிரூபிக்கும். சிறு மரியாதைகள், பிறரைக்குறித்து கருத்தாய் ஆலோசிக்கும் சிறு செயல்கள் எந்தளவு அதிக அர்த்தமுடையவை! அவைகள் நம்மை சுற்றிலுமுள்ளவர்களது மகிழ்ச்சியில் அதிகமாக பாதிப்பேற்படுத்துகிறது, கிறிஸ்துவின் தூதுவர்களாக நம் சொந்த செல்வாக்கையும் எந்தளவு அடிக்கடி பெரியளவில் பாதிப்பேற்படுத்துகிறது! ஆகவே நம் வார்த்தைகள், நம் செயல்கள் மற்றும் நாம் செய்யவேண்டிய அனைத்திலும் அதிக அக்கறையோடும் கவனத்தோடும் நாம் செயல்படவேண்டியுள்ளது. இந்த அக்கறையை கர்த்தர் தாங்கும்படி அவரிடத்தில் ஒப்படைக்கக்கூடாது. இது அவருக்கான கவலை அல்ல, இதை நமக்குநாமே முறையாக சுமக்கவேண்டும்.

**கர்த்தரால் மேற்பார்வையிடப்படும் நம் அனுபவங்கள்**

தேவன் இப்பிரபஞ்சத்திலேயே மிகவும் விழிப்புணர்வுள்ள ஜீவியாயிருக்கிறார் என்பதில் நாம் உறுதியாயிருக்கமுடியும். நம் திறவுகோல் வசனத்தில் கூறப்பட்ட வார்த்தையின் உணர்வுப்படி, கவலை மற்றும் இளைப்பாறுதலற்ற சிந்தை என்ற உணர்வில் அவர் அக்கறையாய் இருப்பதில்லை, ஆனால் சரியான மற்றும் முறையான உணர்வில் அவர் மிக கவனமாக இருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் விரோதியால் அச்சுறுத்தப்படுவதால், அவர்கள்மீது கவலைகள் வருகின்றன. தம்மிடத்தில் அவர்களுடைய கவலையை சுமத்தவும், தம்மிடத்தில் அவர்களை நெருக்கமாக கொண்டுவருவதற்காகவும், அவர்களுக்கு பொறுமையோடு சகிப்பதைக் கற்றுத்தரவும், அவருடைய தேவையை முழுமையாக அவர்களுக்கு காண்பிக்கவும், முற்றிலும் உதவியற்ற நிலையிலும் அவரில்லாமல் பரிதபிக்கப்படத்தக்க நிலையிலும் அவர்கள் இருப்பதை காண்பிக்கும் நோக்கத்திற்காகவும், இந்த அனுபவங்களை கர்த்தர் அனுமதித்து, தம் ஜனத்தை வழிநடத்துகிறார்.

ஆனால் கவலைகளும் பதற்றங்களும் கர்த்தருடைய ஊழியத்தில் நமக்குத் தடையை ஏற்படுத்தும். கர்த்தரிடத்திலான நம் சமாதானத்தை கவலைகள் நம்மிடமிருந்து திருடிவிடும். ஆகவே அழைத்த அவர், நம்மிடமிருக்கும் நம் எல்லாக் கவலைகளையும். நம்

சமாதானத்துக்கு இடையூறுண்டாக்குகிற அனைத்தையும் அவர்மீது சுமத்திவிட்டு, அதை விட்டுவிடும்படி நம் மாபெரும் சுமைதாங்கியாகிய அவர் நம்மை வற்புறுத்துகிறார் என்ற சிந்தையுடன், இவற்றை அலட்சியமாக அல்லாமல் புத்திசாலித்தனமாக விட்டுவிடவேண்டும். அவர் நம் பாரத்தை இலகுவாக்கி, நம் உபத்திரவங்களை எளிதாக்குவார். இது ஒரு விசுவாசப்பரீட்சை, அவரது அன்பின்மீதுள்ள விசுவாசத்திலும் அவரது வாக்குத்தத்தங்களின்மீதுள்ள விசுவாசத்தின் மூலமாக அல்லாமல் வேறு வழியில் அடையமுடியாது,

**தம் பிள்ளைகள்மீது நம் பிதாவின் அக்கறை**

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் அவன் அதிகமாக கர்த்தரை சார்ந்திருக்கவேண்டும். வயலின் புல்லையும். ஆகாயத்துப்பறவைகளையும் நம் பரலோகப்பிதா பராமரிக்கிறார். லில்லி புஷ்பங்களையும், மற்றும் அநேக குருவிகளைப் பார்க்கிலும் தம் பிள்ளைகளிடத்தில் அதிக அக்கறையாயிருக்கிறார் என்பதை ஒரு கிறிஸ்தவன் முன்பைவிட அதிகமாயும், முழுமையாயும் உணரவேண்டும். அவ்வாறே உலகத்திற்காகவும் அவர் ஒரு திட்டத்தை உடையவராயிருந்து, ஏற்றவேளையில் அவர்களை ஆசீர்வதிப்பதற்கான ஏற்பாடுசெய்கிறார். ஆனால் நாமோ ஏற்கனவே கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்குள் நுழைந்திருக்கிறோம். ஏற்கனவே அவருடைய பிள்ளைகளாகியிருந்து, அவருடைய விசேஷித்த பராமரிப்புக்குள் இருக்கிறோம். அவரிடத்தில் பயபக்தியுள்ளோருக்கு, ''தகப்பன் தம் பிள்ளைகளிடத்தில் இரங்குகிறதுபோல், கர்த்தர் தமக்கு பயந்தவர்களிடத்தில் இரங்குகிறார்''.

நாம் கவலையில் நிறைந்திருந்தோமானால், தேவனுடைய உண்மையுள்ள பிள்ளைகளாக இருக்கமுடியாது. கவலைப்படுவது ஒரு காரியம், ஆனால் முறையான ஜாக்கிரதையுணர்வு என்பது மற்றொரு விஷயமாயுள்ளது. நாம் ஒவ்வொரு நாளும் அதிக ஜாக்கிரதையோடு இருக்கும்பொழுது, பொதுவான உலகிற்கும், நம் குடும்பங்களுக்கும், நமக்கும் சகோதரர்களுக்கும், கர்த்தருக்குமான நம் கடமைகளை நிறைவேற்ற முடியும், நம் தேவனுக்கும் அதிக பயனுள்ளசேவை செய்யமுடியும்,

நம் ஆடைகளை அடுத்து எங்கு வாங்குவது என்று நாம் கலக்கமடையாமலும், கவலைப்படாமலும் இருக்கவேண்டும். தற்போது உடுத்துவதற்கு நமக்கு ஆடையை பெற்றிருக்கிறோம், இதை கர்த்தர் நமக்கு பொருத்தமானதென்று கொடுத்திருக்கிறார். நம்மை சார்ந்திருப்போர்க்கு தேவையான பொருட்களை வழங்க ஏற்பாடுசெய்ய நம்மால் இயன்ற அனைத்தையும் நாம் செய்யவேண்டும். அநேகர் பெற்றிருக்கிற நல்ல ஆடைகளைப்போல் அல்லது உயர்தர சுவையான உணவைப்போல் கர்த்தர் நமக்கு ஒருபோதும் கொடுக்காவிடினும், நாம் கவலைப்படக்கூடாது. மாறாக, நமக்காக அவரது ஏற்பாடுகள் எதுவாயினும் அதில் நிறைவடைந்து, நன்றியோடு அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். புதுசிருஷ்டிகளாக நமக்கு எது நன்மையோ, எது சிறந்ததோ அதை அவர் தருவார். நம் தேவைகளை அவர் அளிக்கமாட்டார் என்று நாம் இதில் ஐயப்படவோ பயப்படவோ கூடாது. நம் சூழல்கள் அனைத்தையும் குறித்து அவர் அறிந்திருக்கிறார், நம் நலன்களை கவனியாதவர்போல் இருப்பதில்லை. ''ஏற்றகாலத்தில் அவர் உங்களை உயர்த்தும்படிக்கு தேவனுடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருங்கள்'', உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மீது வைத்துவிடுங்கள், அவர் உங்களை ஆதரிப்பார்.

தேவனுக்கு முன்பாக பணிவடக்கத்தோடு இருத்தல் எவ்வளவு அவசியமானது! இந்த அன்பின் நிச்சயத்தன்மை எத்தனை ஆறுதலும் விலையேறப்பெற்றதுமாயுள்ளது! நம் கர்த்தரால் குறியிடப்பட்ட இந்த ஆசீர்வதிக்கப்பட்டவழியில் நடக்கும்போது, நம் சித்தங்களின்படி எதையும் கேட்கக்கூடாது. நமக்கான அவருடைய சித்தம் மட்டுமே நம்மில் நிறைவேறவேண்டும் என்பதை அதிகதிகமாக கற்போமாக. அவருடைய ஞானம் தவறிழைக்காதது. நம் சுமைகள் பெரிதாயிருந்தாலும். சிறியதாயிருந்தாலும் எல்லாவற்றையும் கர்த்தரிடம் கூறுவோமாக. அவருடைய வசனமாகிய தைலத்தையும், அவருடைய சொந்த உரிமைச் சொத்தாயிருக்கிற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களையும் நம் இருதயத்தில் பிரயோகித்து, அவருடைய அன்பு மற்றும் பரிவிரக்கத்தை நம்மில் பொருந்தச்செய்வோமாக! நம் ஒவ்வொரு தேவையையும் அவர் வழங்க மனதாயிருக்கிறார், ஆற்றலுள்ளவராயுமிருக்கிறார் என்று அவர்மீது நம்பிக்கை வைப்போமாக! ஆம்! நாம் அவரது அன்பில் நிலைத்திருப்போமானால், அவர் இவ்வாறு நம்மை ஆசீர்வதிப்பதில் பிரியமாயிருக்கிறார்,

''என் பிதாவின் அக்கறை எத்தனை வலிமையும் இனிமையுமானது!

காற்றில் ரீங்காரமிடும் இசை போன்ற உம் வார்த்தைகள்!
என் மெல்லிய சத்தத்தின் ஜெபத்துக்கு பதிலளிக்க வாரும்!
அவர் உன்னை பராமரிக்கிறார்''
''பின்பு, நிழலோ பிரகாசமோ எதுவும் என்னை காயப்படுத்தாது,
தீமையான எதுவும் என்னையோ என்னுடையதையோ தொடாது.
தெய்வீக மென்மையுடன் நீர் இருந்து,
என்மீது அக்கறையாய் இருப்பீர்!

---------

**R 5509**

# ஆவிக்குரிய இஸ்ரயேலரின் எதிரிகள்

## SPIRITUAL ISRAEL'S ENEMIES

**''பலங்கொண்டு திடமனதாயிரு'' – யோசுவா 1:7.**

மோசேயின் வாரிசாக, இஸ்ரயேலின் தலைவரான யோசுவாவிடம் யேகோவா தேவன் சொன்ன இந்த வார்த்தைகளானது, இஸ்ரயேல் புத்திரர் தேவனுடைய பிள்ளைகளாக யோர்தானைக் கடந்து, அவர்களுடைய புதிய வாழ்க்கைக்குள் நுழையும்போது சொல்லப்பட்டது. அவர்கள் முன்பைவிட இன்னும் அதிக போர்களை சந்திக்கவேண்டியிருப்பதால், அவர்கள் உணர்ந்திருப்பதைக் காட்டிலும் அவர்களுக்கு பலமும் திடமனதும் தேவையாயிருந்தது. தேவனுடைய வாக்குத்தத்தமே அவர்களுடைய பலமும் திடமனதுக்குமான அடித்தளமாக இருந்தது. ஆபிரகாமுடைய வித்தை கானான் தேசத்துக்கு கூட்டிவந்து, அதை அவர்களுக்கு உடைமையாகத் தருவேன் என தேவன் ஆபிரகாமிடம் கூறியிருந்தார். இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசித்தவர்கள் அதிகளவில் உறுதியும் திடநம்பிக்கையுள்ளவர்களுமாய் இருக்கவேண்டும்.

தேவன் அவர்களை எகிப்திலிருந்து மீட்டுவரவும், அவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த அந்த தேசத்திற்கு அவர்களை அழைத்துவந்து, அதை அவர்களுடையதாக்குவதற்காகவும் தம் ஊழியக்காரனாகிய மோசேயை அனுப்பினார். எகிப்து தேசத்திலிருந்து வெளியேவருவதற்கு நல்ல தைரியம் தேவைப்பட்டது. அவர்கள் உண்மையும் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருந்தபோது, அவர்களுக்கு வந்த ஆசீர்வாதங்கள் மூலம் தேவன் வனாந்தரத்தில் தம்முடைய தயவை வெளிப்படுத்தினார். மேலும் அவர்கள் கீழ்ப்படியாதபோதும் கலகம் செய்தபோதும் அவர்களை சிட்சித்தார். தற்போது வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதை எதிர்பார்த்திருந்து, அதை கண்டுணரும்படியாக அவைகளுக்குள் நுழைந்தனர். ''பலங்கொண்டு திடமனதாயிரு'' என யேகோவா தேவனால் யோசுவாவின்மூலம் எச்சரிக்கப்பட்டனர். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் வந்தபோது அவர்களுடைய எதிரிகளோடு ஒரு அருமையான போர் புரியவேண்டியதாயிருந்தது. சுமூகமான உடைமையாக அந்த தேசத்தை அவர்களுக்குத் தந்துவிடுவதாக தேவன் வாக்குறுதி தராமல், அவர்கள் தங்களுடைய எதிரிகளுடன் போரிட்டு வெற்றியடையவேண்டியதாயிருந்தது.

இஸ்ரயேல் ஜனங்கள் அடையாளமான ஜனங்களாக இருப்பதுபோலவே அவர்களுடைய போர்களும் அடையாளங்களே. அவர்களால் அழிக்கக் கட்டளையிடப்பட்ட மக்கள் அனைவரும் நித்திய சித்திரவதையின் நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்று அவர்கள் நினைத்திருப்பார்களானால் அது பயங்கரமானதாக இருந்திருக்கும். இஸ்ரயேல் ஜனங்கள் அவர்களுடைய எதிரிகளை அப்படிப்பட்ட நரகத்தில் அனுப்புவதற்கு பலங்கொண்டு திடமனதாயிருக்க கூறப்பட்டிருந்தால், அதுவும் ஒரு பயங்கரமான எண்ணமாக இருந்திருக்கும். பாவத்திற்கான தண்டனை மரணமேயன்றி நித்திய வேதனை ஸ்தலமாகிய நரகமல்ல, மேலும் நரகம் என்பது மரணநிலைமையே என உணரும்போது, நாம் அவ்விஷயத்தை வேறு வெளிச்சத்தில் காண்கிறோம். மனிதர்கள் பட்டயத்தினாலோ அல்லது கொள்ளைநோயினாலோ அல்லது குடிப்பழக்கத்தினாலோ அல்லது விபத்துக்களினாலோ மரித்துவிட்டால், அது, தேவனுடைய ஏற்றவேளை மற்றும் ஏற்ற வழியில் தொடர்ந்து மனுக்குலத்தின்மேல் நிறைவேறிவருகிற, தெய்வீகத் தீர்ப்பின் நிறைவேறுதலாக மட்டுமே இருக்கும். இது முழு விஷயத்திற்கும் ஒரு வித்தியாசமான அம்சத்தைத் தருகிறது.

### அமலேக்கியர், ஏத்தியர்கள் முதலானவர்களுக்கான நம்பிக்கை

அமலேக்கியர்கள், ஏத்தியர்கள், எமோரியர்கள், பெர்சியர்கள், எபூசியர்கள் முதலானவர்களுடைய அக்கிரமம் முழுமையடைந்திருந்தது. அவர்கள் சில வாய்ப்புக்களையும். வெளிச்சத்தையும் பெற்றிருந்தாலும் அவர்கள் பற்றிக்கொண்ட பாவ வழியானது முடிவுக்கு வரவேண்டும். அவர்களும், மற்ற அனைவரும் அறியாமையினாலும் பாவத்தினாலும் கல்லறைக்குள் சென்றிருந்தாலும், மேசியா தம்முடைய இராஜ்யத்தை கட்டும்போது, உயிர்த்தெழுதலின் வாய்ப்புக்குள் வந்து, சாதகமான மற்றும் சிறப்பான நிலைமைக்கு வருவார்கள்.

கடந்தகாலத்தில் பாவத்தோடு அவர்கள் அனுபவப்பட்டிருந்ததைப்போல, எதிர்காலத்தில் நன்மையோடு அனுபவப்பட்டு, சரி மற்றும் தவறு, நன்மை மற்றும் தீமை ஆகியவற்றை தீர்மானிக்கும் வாய்ப்பைப் பெறுவர். கடந்தகால அனுபவங்களின்மூலம் ஆதாயம் அடைந்த ஜனங்களில் சிலர் இருப்பார்கள் என்று நம்புகிறோம். மேலும் அச்சமயத்தில் அவர்கள் முன்பாக தீமை இருந்தபோதிலும், நன்மையை மட்டுமே தேர்ந்தெடுப்பதினால் அவர்களுடைய குருடாக்கப்பட்ட நிலைமையும் நீக்கப்படும்.

**இஸ்ரயேலரின் எதிரிகள் முன்னடையாளமானவர்கள்**

இஸ்ரயேல் புத்திரர் ஆவிக்குரிய இஸ்ரயேலரை குறிக்கிறார்கள். அவர்கள் அழித்த எதிரிகள் சபையினுடைய எதிரிகளைக் குறிக்கிறார்கள். சபையினுடைய காரியத்தைப் பொறுத்தவரை, பாவம் மற்றும் சீரழிந்த நிலைமையிலிருந்தும் வந்து, நாம் தேவனோடு இணக்கமாயுள்ளோம். அதிக விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் காரணமாக சிலருக்கு இது குறுகிய பயணமாகவும், மற்ற சிலருக்கு இது மிக நெடுந்தூர பயணமாகவும் இருக்கின்றது. நாம் தேவனுக்கென்று முற்றிலும் அர்ப்பணிப்பு செய்தபோது விசேஷித்த ஆசீர்வாதமான இடத்தை அடைந்து, இளைப்பாறுதலுக்குள் நுழைந்துவிட்டோம். அப்.பவுல் கூறுகிறபடி ''விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தோம்'' என்கிறார். நாம் பிரவேசித்திருக்கிற இந்த இளைப்பாறுதல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை குறிக்கிறதாயுள்ளது.

ஆனால் விசுவாசத்தின் இந்த இளைப்பாறுதலுக்குள் நாம் பிரவேசித்தபோது சில சக்திவாய்ந்த எதிரிகளை மேற்கொள்ளவேண்டியதைக் கண்டோம். இந்த எதிரிகள் நம்முடைய சொந்த சரீரத்திலேயே வேரூன்றியிருப்பதை நாம் காணலாம். இஸ்ரயேலரின் நிழலான எதிரிகளைப் பொறுத்தமட்டில், மிகவும் பலமானவர்களாக இஸ்ரயேலரைச் சுற்றி இருந்தனர். அவர்களை இடம்பெயரச்செய்வதும், அழிப்பதும் மிகவும் கடினமானதாக காணப்பட்டது. ஆனால் மற்றவர்களை அழிப்பதோ அவர்களுக்கு சுலபமானதாக இருந்தது. நமக்குத் தெரிந்தபடி அவர்களுடைய தேசத்தையும் எதிரிகளையும் முற்றிலும் மேற்கொள்வதற்கு பல வருடங்கள், அதாவது பல நூற்றாண்டுகள் ஆனது. தாவீது ராஜாவின் காலம்வரையிலும் இந்த எதிரிகளை முழுவதுமாக அடிபணியவைக்க இயலவில்லை. அவ்வாறே. நம்முடைய மாம்சத்தில் இருக்கும் எதிரிகளுடனும் இருக்கிறது. அவைகளுக்கு எதிராக நாம் ஒரு நல்ல போராட்டத்தை போராடவேண்டும். நம்முடைய மாம்சத்துக்கு எந்தவொரு சலுகையையும் தரக்கூடாது, இந்த எல்லா எதிரிகளும் மரிக்கிறவரைக்கும் அடியோடு அழிக்கப்படவேண்டும்.

இப்போரினுடைய முடிவு மரணமேயாகும் – ஒன்று புதிய சிருஷ்டியினுடைய மரணம் அல்லது பழைய சிருஷ்டியினுடைய மரணமாக இருக்கும். புதிய சிருஷ்டியானது வெற்றிபெறத் தவறுமானால் அது அடியோடு அழிக்கப்பட்டு இரண்டாம் மரணத்தை அடையும். நம்முடைய ஆதார வசனத்தில் யேகோவாதேவன் யோசுவாவினிடத்திலும் இஸ்ரயேலரினிடத்திலும் பேசுவதைக்காட்டிலும்,ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நம்மிடத்தில் அதிகம் பேசுகிறார். அதாவது மாம்சீக இஸ்ரயேலருக்கு பொருத்திப் பார்ப்பதைவிட, அவருடைய வார்த்தைகளை நமக்கு இன்னும் ஆழமாக பொருத்திப் பார்க்கவேண்டும். ஆனால் இப்போரில் நாம் தனிமையாக போராடி வெற்றியடையமுடியாது. ''நான் பெலவீனனாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்'' என அப்போஸ்தலர் பவுல் உரக்கப்பேசுகிறார். இதன் அர்த்தம் என்னவெனில் நான் என்னுடைய பெலவீனத்திற்கும் மாம்சத்தின் குறைபாடுகளுக்கும் எதிராக தனிமையில் போர் செய்யமுடியாது என்று என் பலவீனத்தை உணரும்போது, கர்த்தருக்குள் நான் பலங்கொண்டிருக்கிறேன் என்பதாகும். எனக்கு நானே நல்ல போராட்டத்தை போராட முடியவில்லை. ''என் கிருபை உனக்குப்போதும், உன்னுடைய பெலவீனத்திலே எனது பலம் விளங்கும்'' என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை அப்.பவுல் உணர்ந்துகொண்டார்.

தேவனுடைய சிறியவர்களாகியவர்கள் அனைவருக்கும் இதுவே நிச்சயமான அனுபவங்களாயிருக்கும். இந்த உணருதல் நம்மை மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை கவனிக்கும்படி வழிநடத்தி, நாம் பலங்கொண்டு திடமனதாயிருக்கும்படி நம்முடைய இருதயத்தை பலப்படுத்தவும் நம்முடைய பிரயாசங்களை புதுப்பிப்பதோடு, தம்முடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயத்துக்கு வாங்கி நம்மை நேசிக்கிறவர் மூலமாக ஜெயங்கொண்டவர்களாக, முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக தேவகிருபையினால் நாம் வருவதற்கு நம்மை வழிநடத்தும்.

**உண்மையான தைரியத்துக்கு எதிரான துணிச்சலின் ஆவி**

நாம் நல்ல திடமனதுடன் இருப்போமாக! தைரியத்தில் பல்வேறு வகைகள் உள்ளன. ஒன்று

அகங்காரம் மற்றும் தன்னம்பிக்கையால் பிறக்கிறது, மற்றொன்று பொறுப்பற்ற மனப்பான்மையின் விளைவுகளாகும். இது எதிர்கொள்ளவேண்டிய சிரமங்கள் பற்றி சரியான மதிப்பீட்டை எடுக்கத் தவறுவதனால் வருவது. உண்மையான தைரியம் என்பது கர்த்தருடைய வார்த்தையானது தமது ஜனங்களுக்கு கட்டளையிடுவதனால் வரும் தைரியமாகும்.ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அனைவரும் தங்கள் உடைமையாக்கிக்கொள்ளத் தேடுகிற தைரியமாயிருக்கிறது. மேலும் அனைத்து இது தங்கள்முன் இருக்கும் சோதனைகளையும் சிரமங்களையும் அவர்கள் கவனமாக கவனித்துஉணர்ந்து, தங்களுடைய சொந்த இயலாமையை உணர்ந்துகொள்ளும்போது, தேவையான உதவிக்காக விசுவாசத்தோடு கர்த்தரை நோக்கிப்பார்த்து, அவருடைய மகாமேன்மையான வாக்குத்தத்தங்களின்மேல் நம்பிக்கை வைப்பதாகும். இது அவர்களின் சொந்த பலத்தை நம்புகிறவர்களை திகைக்க வைத்து, அவர்களுடைய சிரமங்கள், ஆபத்துக்கள், தடைகள் முன்னிலையில் வலிமையாகவும் தைரியமாகவும் இருக்க உதவுகிறது.

எனவே கர்த்தருடைய சத்துவத்திலும் அவருடைய வல்லமையிலும் பலப்படும் வண்ணமாக, எல்லோரும் ‘‘பலங்கொண்டு திடமனதாயிருப்போமாக’’! ‘‘நமக்கு எதிராயிருக்கிற எல்லாவற்றைக் காட்டிலும் நம் பட்சத்தில் இருக்கிறவர் பெரியவராயிருக்கிறார் !’’. இந்த தீங்கு நாளில் அவைகளை நாம் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாயிருக்கும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்வோமாக !.

---------

**R 5510**

## கலியாண விருந்து
## THE WEDDING FEAST

‘‘எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச்சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று’’ –லூக்கா 13:34.

இராஜ்யத்தைப் பற்றின மற்றொரு உவமையை இங்கே நாம் பெற்றிருக்கிறோம். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழாக இஸ்ரயேலருக்கிருந்த தேவனுடைய வாக்குத்தத்தங்களும், அவருடைய ஏற்பாடுகள் அனைத்துமே இஸ்ரயேலர்களை தேவனுடைய பரிசுத்த தேசமாக ஆயத்தப்படுத்தி, பொருந்தச்செய்யவும், அதிலும் குறிப்பாக கிறிஸ்துவின் வருகையின்போது இராஜ்யத்தில் மேசியாவின் உடன் சுதந்திரர்களும், அவரது மணவாட்டியுமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட திருச்சபையாக ஏற்படுத்தப்படுவதற்கு போதுமான எண்ணிக்கையை வழங்குவதற்காகவும் வடிவமைக்கப்பட்டிருந்தன என்பதை இந்தப் பாடமானது காட்டுகின்றது. ஒரு சிலர் மாத்திரமே கபடற்ற ‘‘உத்தம இஸ்ரயேலர்களாக’’ இருந்தனர் என்பதையும், அந்த எண்ணிக்கை இராஜ்ய வகுப்பாரை உருவாக்குவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை என்பதையும் உவமையானது காட்டுகின்றது. இதனிமித்தமாக மேசியாவினுடைய இராஜ்யத்தில் உடன்சுதந்திரர்களாக இருப்பதற்காக இந்தச் சுவிசேஷ யுகத்தின் அழைப்பானது, எஞ்சின யூதர்களுடன், பரிசுத்தவானுக்குரிய குணலட்சணங்களுடைய போதுமான எண்ணிக்கையினரை புறஜாதியாரிடமிருந்து தேர்ந்தெடுத்து வருகின்றது.

தேவனுடைய இராஜ்யம் என்று சொல்லப்படுகிற பரலோக இராஜ்யமானது, ஒரு பூமிக்குரிய இராஜ்யமாக இராமல், ஒரு பரத்திற்குரிய இராஜ்யமாக இருக்கும். அதின் இராஜாவாகிய மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவும் பூமிக்குரிய இராஜாவாக இருக்கமாட்டார். மாறாக மிக உயரிய திவ்ய சுபாவத்தைப் பெற்றிருக்கும் பரலோக ஜீவியாக இருப்பார். தேவனையும் பரலோக ஆட்சியையும் அல்லது ஆளுகையையும் குறிக்கும் இந்த இராஜ்யமானது, பாவத்தை ஒழிப்பதற்காக மனிதர்களிடையே ஸ்தாபிக்கப்பட உள்ளது. ‘‘இந்த உலகத்தின் அதிபதியாகிய’’ சாத்தானைக் கட்டுவதே அதனுடைய முதல்வேலையாக இருக்கும். அதன்பிறகு அந்தகாரத்தின் கிரியைகள் அனைத்தும் தூக்கியெறியப்படும். தூக்கியெறியப்படுவது முதலில் ஒரு மகா உபத்திரவக்காலத்தை ஏற்படுத்தும், அதனைத்தொடர்ந்து, நீதியின் அரசாட்சி முன்னேறி நடந்துகொண்டிருக்கும்போது, இனி ஒருபோதும் சாபமும், தவிப்பும், அழுகையும், மரணமும் இருப்பதில்லை என்றாகும்வரையில், சாபத்தின் ஒவ்வொரு வடிவமும் மேசியாவின் இராஜ்ய ஆசீர்வாதங்களுக்கு முன்பாக வழிவிட்டோடும்.

ஆனால் இந்தப் பரலோக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக, மனுஷர் மத்தியிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்ட மணவாட்டி வகுப்பார் எனும் ஒரு வகுப்பார் இருக்கவேண்டும் என்பது தெய்வீக ஆணை

மற்றும் தெய்வீக ஏற்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும் தேவனுடைய கைவேலைப்பாடுகளுமானவர்கள். இவர்களில் தேவன், வேதாகமத்தின் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் மற்றும் வாழ்க்கையின் ஏற்பாடுகள் வாயிலாக கிரியைசெய்துவருகிறார். இவ்வாறு இவர்கள் சிந்தையில் மறுரூபமாக்கப்பட்டு, பூமிக்குரிய சுபாவத்திலிருந்து பரலோக சுபாவத்துக்கு "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படும்" மகிமைவாய்ந்த பிறப்பாகிய உயிர்த்தெழுதலுக்கு ஆயத்தப்பட்டு வருகிறார்கள். இவ்வாறு அவர்கள் தங்களது கர்த்தருடைய மணவாட்டி வகுப்பாராக, அவருடைய இராஜ்யத்தில் அவருடைய உடன்சுதந்திரர்களாக மாறுவதன்மூலம் அவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

**உவமையின் பயன்பாடு**

இந்த இராஜ்ய வகுப்பாரின் வளர்ச்சிக்காக, உலகமானது இயேசுவின் நாட்கள் துவக்கி இந்நாள் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கின்றது. அவருடைய மரணத்தின்மூலம் அவர் ஒரு புதிய ஜீவமார்க்கத்தைத் திறந்து, அவருடைய சீஷர்களாக, அவருடைய உடன்சுதந்திரர்களாக, அவருடைய மணவாட்டியாக இருக்க வாஞ்சிக்கும் அனைவருக்கும் பிதாவின் முன்பாக பரிந்துபேசுபவரானார்.

இந்தப் பாடமானது நமது கர்த்தரின் பூமிக்குரிய ஊழியக்காலத்தில் நடைபெற்றுவந்த இராஜ்யத்தின் திட்டப்பணியைப்பற்றிக் கூறுகிறது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை... அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்(சுயாதீனத்தை அல்லது சிலாக்கியத்தை) கொடுத்தார்" – யோவான் 1:11,12.

தேவன்தாமே தம்முடைய குமாரனுக்குக் கலியாண ஏற்பாடு பண்ணின அந்த இராஜாவாக இருக்கிறார். உலகத்தோற்றத்திற்கு முன்பே, அவரது (வருங்கால) இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் சில உடன்சுதந்திரர்கள் இருக்கவேண்டும் என்று ஏற்பாடுசெய்தார். நிச்சயமாக, இராஜாவின் குமாரன் இந்த உலகத்திற்கு வந்து, தம்மைப் பின்பற்றுபவர்களுக்காகவும், தாம் இராஜாவாக இருக்கப்போகிற இராஜ்யத்திற்காகவும் வழியை ஏற்பாடுபண்ணும் வரையில் இந்தக் கல்யாணமானது நடைபெறமுடியாது.

ஏற்றகாலத்தில், கலியாணத்திற்கு அழைக்கப்பட்டவர்களை அழைப்பதற்கு தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை அனுப்பினார். ஆனால் அவர்களோ வரவில்லை. இராஜாவின் குமாரன் அவர்கள் மத்தியில் இருக்கிறார் என்பதை யூத ஜனங்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் வேலையை யோவான் ஸ்நானகனும் அவருடைய சீஷர்களும் செய்தார்கள். அவர், "நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்" என்றார்(யோவான்1:26). மீண்டுமாக அவர், "மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" என்றார்(யோவா3:29). மணவாளனுடைய சத்தத்தைக் கேட்பதற்கு யோவான் சந்தோஷமாயிருந்தார். தான் அதில் ஓர் அங்கமாக இருக்கமுடியாது என்றிருந்தாலும்கூட, மணவாட்டி வகுப்பாருக்கான அழைப்பு வந்தாயிற்று என்று தீர்க்கதரிசனமாக அவர் முன்னறிவித்தார்.

**செய்தியை அசட்டைபண்ணுதல்**

திரும்பவும் வேறு ஊழியக்காரர்கள் அனுப்பப்பட்டனர். அதாவது, இயேசு தம்முடைய சீஷர்களை யூதர்களிடம் அனுப்பி, "நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன், என் எருதுகளும் கொளுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு(கலியாண விருந்துக்கு) வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள்" என்று கூறச்சொன்னார்.

ஆனால் இயேசு மற்றும் அவரது சீஷருடைய செய்தி ஏற்றுக்கொள்ளப்பட்டதா? இல்லை! அவ்வேளையில் இறையியலாளர்களாயிருந்த வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களுடைய வழிகாட்டுதலின்கீழ், ஜனங்கள் இந்தச் செய்தியை அசட்டைபண்ணி, இராஜ்யத்தைப் பற்றின இந்தச்செய்தியை நாங்கள் நம்பவில்லை என்றுகூறி, தங்கள் சொந்த வழியில் சென்றனர் – ஒருவர் தன் வயலுக்கும் மற்றொருவர் வியாபாரத்திற்கும் சென்றனர். சிலர் இதைக்காட்டிலும் மோசமானதைச் செய்தார்கள். அவர்கள் இந்த ஊழியக்காரரைப்பிடித்து அவமானப்படுத்தி, வெறுக்கத்தக்க விதத்தில் நடத்தி, அவர்களைக்

கொலைசெய்தார்கள். விருந்துக்கு அழைக்கப்பட்ட அவிசுவாசிகளால் இயேசு கொல்லப்பட்டது மாத்திரமல்லாமல், அவருடைய உண்மையுள்ள சீஷர்களும் கொடுமையான வகையில் நடத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.

பிறகு, மற்றொரு உவமையில் காணப்படுகிறபடி, தேவன் அந்த இஸ்ரயேல் ஜனத்தின்மீது கோபமடைந்து, தம்முடைய படைகளை அனுப்பி, அந்தக் கொலைகாரர்களை அழித்து, அவர்களுடைய நகரத்தை எரித்தார். கிபி 70இல் தீத்துஇராயன் கீழாக வழிநடத்தப்பட்ட உரோமப்படையே எருசலேமை அழித்தது எனும் கூற்றானது, யேகோவாதேவனின் சேனையை குறைத்துமதிக்கும்படி செய்யாது. ஏனெனில் மனுஷனுடைய கோபத்தை தமது மகிமையாக மாற்றுவதற்கும், தாம் விரும்புபவர்களைத் தம்முடைய தூதர்களாகவோ ஊழியக்காரர்களாகவோ பயன்படுத்துவதற்கும் அவர் வல்லவராயிருக்கிறார்.

**கலியாணத்திற்குப் புறஜாதிகள் அழைக்கப்பட்டனர்**

இதற்கிடையில் தேவன் தம்முடைய ஊழியக்காரர்களாகிய அப்போஸ்தலர்களிடமும், அவர்கள் மூலமாக மற்றவர்களிடமும் ; "கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, ஆனால் விசேஷமாக அழைக்கப்பட்ட யூத தேசத்தாரோ, அந்தக் கனத்துக்கு அபாத்திராய்ப் போனார்கள். ஆகையால், நீங்கள் வழிச் சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்துக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று கூறினார். எனவே அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். இவ்வாறு விருந்தினர்களுடன் திருமணம் நடைபெற்றது.

வழிச்சந்திகள் என்பது உலகெங்கிலும் உள்ள பொது ஜனத்தைக் குறிக்கும். கர்த்தருடைய ஸ்தானாபதிகள் இனி யூதர்களிடம் மாத்திரம் செல்லவேண்டும் என்கிற தடையேதுமில்லாமல், சகல ஜனக்கூட்டத்தாருக்கும், கோத்திரத்துக்கும், பாஷைக்காரருக்கும், "தேவன் இப்போது உலகத்திலிருந்து நீதியை நேசிக்கும் ஒரு சிறிய கூட்டத்தாரை, ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுபவர்களாக இருப்பதற்கும், இறுதியில் மீட்பருடன் அவரது இராஜ்யத்தில் உடன்சுதந்திரர்களாக இருப்பதற்கும் அழைத்துக்கொண்டிருக்கிறார்" என்பதைத் தெரியப்படுத்த வேண்டியிருந்தது. இந்த ஸ்தானாபதிகள் கலியாண விருந்தில் பங்குகொள்வதற்கான கதவு திறந்திருக்கிறது என்கிற மாபெரும் சிலாக்கியத்தைக் குறித்து, வழிச்சந்திகளில் உள்ள அனைத்து ஜனங்களிமும் சென்று இடைமறித்து அழைக்கவேண்டும் என்றிராமல், மாறாக, ஜனக்கூட்டத்தில் அவர்கள் சந்தித்த அனைவரிடமும் வலியுறுத்துவதாக மாத்திரம் இருந்ததைக் கவனியுங்கள்.

இவர்கள் எல்லாரும் பரிசுத்தவானுக்குரிய தன்மையுள்ளவர்களாய், நல்லவர்களாய் இருக்கவில்லை; அவர்களிலும் சிலர், அதற்கு மாறாக, மோசமானவர்களாக இருந்தனர். இதைக்குறித்து அப்போஸ்தலர் விளக்குகையில் "மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. மாறாக பிரதானமாக, ஏழைகளையும், இந்த உலகத்தின் இழிவானவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார்" என்று கூறுகிறார். நமது பாடத்திற்கு ஒத்தவாறு, உலகத்திலிருந்து தேவன் தெரிந்தெடுத்துகொண்டிருக்கும் வகுப்பாரைக் குறித்து அப்போஸ்தலர்கள் பேசுகிறார்கள். இயல்பினால் எவ்வளவு இழிவானவராக இருந்தாலும் சரி, எவ்வளவு தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும் சரி, எவ்வளவு அற்பமானவராக இருந்தாலும் சரி – தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அனைவருமே, கிறிஸ்துவின் நீதி எனும் கலியாண வஸ்திரத்தின் மூலம் கலியாணத்திற்குப் பொருத்தமானவர்களாக உருவாக்கப்படலாம்.

மெய்யாகவே, மாம்சத்தின்படி எவ்வளவு மேன்மையுள்ளவர்களாகவோ அல்லது தகுதியுள்ளவர்களாகவோ இருந்தாலும், அவர்கள் இன்னும் இராஜாவின் சமூகத்திற்குத் தகுதியற்றவர்களாகத்தான் இருக்கின்றார்கள். இந்தக் கலியாணத்தில் கலந்துகொள்ளும் அனைவருமே கலியாண வஸ்திரத்தை அணிந்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் நீதியின் புண்ணியத்தால் மூடப்பட்டிருக்கவேண்டும். இவ்வாறு கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்திருந்தது – இராஜா நோக்கங்கொண்டிருந்த அனைவராலும் ஒவ்வொரு இடமும் நிரப்பப்பட்டது. இப்படியாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையானது நிர்ணயிக்கப்பட்ட ஒன்று என்றும், மேலும் அந்த விசேஷித்த நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கை நிறைவடைந்தவுடனே அழைப்பு நின்றுவிடும் என்றும் கர்த்தர் குறிப்பிடுகிறார்.

**விருந்தாளிகளை உள்ளே வந்து பார்த்தல்**

சந்தேகத்திற்கிடமின்றி தெய்வீக ஏற்பாட்டால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யூதர்களின் வழக்கத்தின்படி. ஒவ்வொரு கலியாண விருந்திலும் ஒவ்வொரு விருந்தாளியும், தங்களுடைய சொந்த ஆடைகளை மூடும் வண்ணமாக ஒரு வெள்ளை நிற கலியாண வஸ்திரத்தை அணியவேண்டியிருந்தது. இவ்வாறு, உபசரிப்பவரின் விருந்தாளிகளாக அவர்கள் இருந்தபடியால்,

கலியாணத்தில் மரியாதை சம்பந்தப்பட்ட விஷயத்தில் அனைவரும் சமமான நிலையில் இருந்தனர். ஆகவே, கிறிஸ்துவின் மூலம் வழங்கப்பட்ட தேவனுடைய மாபெரும் விருந்துக்கு வரும் அனைவரும், மாம்சத்தின்படியான தங்களுடைய எந்தச் சொந்தத் தகுதியின் மூலமாகவும் வராமல், தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதி தங்களிடத்தில் இல்லாதிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டு, தாங்கள் இணங்கவிரும்பும் இவ்வழைப்பிற்கு, கிறிஸ்துவினுடைய புண்ணியமே தங்களைத் தகுதிபண்ணுகிறதாயிருக்கிறது என்று ஏற்றுக்கொண்டு, வரவேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

வீட்டிற்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு விருந்தினருக்கும் அந்த வஸ்திரம் வழங்கப்பட்டது. மேலும் உடனடியாக அதனை அவர்கள் அணிந்துகொள்ளவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. எவரேனும் அந்த கலியாண வஸ்திரத்தை அணியாது காணப்பட்டால், அது அதனை வழங்கிய விருந்தின் எஜமானனை அவமதிக்கும் ஓர் அடையாளமாக இருக்கும். உண்மையில், அந்த வஸ்திரமின்றி எவருமே உள்ளே அனுமதிக்கப்படவில்லை என்பதால், யாரேனும் கலியாணத்தில் அந்த வஸ்திரம் அணியாமல் காணப்பட்டால், அவர் அதைக் கழற்றிவைத்துவிட்டார் என்பதையே அர்த்தப்படுத்தும். இக்காட்சியே உவமையில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. கலியாண வஸ்திரம் அணியாத ஒரு விருந்தாளி அங்கு காணப்பட்டார் – ஆக, தன்னை அழைத்தவரை அலட்சியப்படுத்தி, உள்ளே அனுமதிக்கப்படுவதற்கான நிபந்தனையாக அணியப்பட்டிருந்த தனது கலியாண வஸ்திரத்தைத் கழற்றிவிட்ட ஒருவர் அங்கு காணப்பட்டார்.

''இராஜா உள்ளே பிரவேசித்தபோது'' என்கிற வார்த்தைகள், விருந்துக்கு சற்று முன்பாக ஒருமுறை உள்ளேவந்து பார்த்ததைக் குறிக்கிறது. உவமையில் வருகிற இராஜா, யேகோவா தேவனைக் குறிக்கின்றபடியால், உண்மையுள்ளவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கை பண்ணி, அதே வேளையில் கிறிஸ்துவினுடைய மரணத்தின் புண்ணியத்தை அவமதிக்கிறவர்களை தெய்வீக நீதியின் வெளிப்பாட்டினால் கண்காணிப்பார் என்பதாக காண்பிக்கப்படுகிறது. அல்லது இச்சம்பவத்தில் இராஜா கிறிஸ்துவுக்கு முறையான அடையாளமாக எடுத்துக்கொள்ளப்படக்கூடும். ஏனெனில் இராத்தல் மற்றும் தாலந்துகளின் உவமைகளில் நம்முடைய கர்த்தர் தாமே குறிப்பிடுகிற வண்ணமாக, அவருடைய வருகையின்போது, பரமபிதாவால் அவருக்கு இராஜரீக அதிகாரமும் வல்லமையும் அளிக்கப்படவேண்டியிருக்கிறது. ஆகவே தம்முடைய இரண்டாம் வருகையின்போது, தம்முடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களாக காட்டிக்கொள்பவர்களை – கலியாண விழாவில் கலந்துகொண்டு குதூகலிக்க விரும்புகிற அனைவரையும் தாமே கண்காணிக்கப்போவதாக அவர் நமக்கு சொல்கிறார்,

இராஜா முன்னிலையில் கலியாண வஸ்திரமின்றி காணப்பட்ட மனிதன், வெறுமனே ஒரு தனிநபரை குறிக்காமல், ஒரு வகுப்பாரைக் குறிப்பதாக நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே தாங்கள் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்றும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம் என்றும், தங்களுடைய கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கும் நம்பிக்கையை பெற்றிருக்கிறோம் என்றும் கூறிக்கொண்டிருந்தாலும், தங்களுடைய பிதாவின் முன்பாக நிற்பதற்குத் தேவையான கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தை தாங்கள் இனி ஒருபோதும் நம்புவதில்லை என்று நமக்குச் சொல்லுகிற அப்படிப்பட்ட ஒரு வகுப்பாரை இன்று நாம் காணலாம். இவர்கள் இயேசுவைத் தங்களுடைய இரட்சகராகவும், மீட்பராகவும், தங்கள் பாவங்களுக்கு பரிகாரியாகவும் இருப்பதில்லை என மறுதலிக்கின்றனர். அவர்கள் அவரைத் தங்கள் போதகராக மாத்திரம் கருதுகின்றனர். மேலும் அவருடைய போதனைகளிலுமே ஒரு பகுதியை மாத்திரமே ஏற்றுக்கொள்கிறவர்களாக இருக்கின்றார்கள்.

கிறிஸ்துவின் மணவாட்டியின் அங்கத்தினர்களாக இருப்பதற்கு இவர்கள் வெளிப்படையாகவே தகுதியற்றவர்களாக இருக்கின்றனர். நேர்மையும் உண்மையுமுள்ளவர்கள் மாத்திரமே அந்த வகுப்பாரில் இருப்பர். கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தை நிராகரிப்பவர்கள் அனைவரும், இராஜ்ய வகுப்பாரிலிருந்து நிராகரிக்கப்படுவார்கள் என உவமை காட்டுகிறது. கலியாண வஸ்திரம் இல்லாமல் எப்படி உள்ளே வந்தார்கள் என்பதை அவர்களால் சொல்ல முடியவில்லை; ஏனெனில் அந்த வஸ்திரம் இல்லாமல் அவர்கள் உள்ளே வந்திருக்கமுடியாது. முதலாவது தங்களுடைய அபூரணங்களை மறைக்கும் கிறிஸ்துவின் புண்ணியம் எனும் கலியாண வஸ்திரத்தை ஆரம்பத்தில் அணியாமல் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையிலுள்ள ஆவியின் ஐக்கியத்தில் யாருமே ஒருக்காலும் அனுமதிக்கப்பட்டதில்லை. இவ்வாறு கலியாண வஸ்திரத்தைக் கழற்றிவிட்டதாக ஒப்புக்கொள்பவர்கள் உடனடியாக வெளியேற்றப்படுகிறார்கள். இராஜா பணிவிடைக்காரரை நோக்கி, ''இவனைக் கையுங்காலும் கட்டிக்கொண்டுபோய். அழுகையும் பற்கடிப்பும்

உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்'' என்று கூறினார்.

**புறம்பான இருள்**

நம்முடைய மனமானது இருண்ட யுகத்தின் உணர்வுப்பூர்வமான தவறான கருத்துக்களால் நிரப்பியிருந்தபோது, இந்த உவமையையும் மற்ற வேத வாக்கியங்களையும் அதில் குறிப்பிடாதவற்றை (குறிப்பிடப்பட்டதுபோல்) படித்தோம். கலியாண வஸ்திரம் இல்லாத மனிதனால் குறிப்பிடப்படும் வகுப்பார், நித்திய வேதனையில் தள்ளப்படுவார்கள் என்றும், அங்கே நித்தியத்துக்கும் சித்திரவதை செய்யப்படுவார்கள் என்றும் நாம் யூகித்தோம். ஆனால் இப்போது வேத வாக்கியங்களை மிகவும் கவனமாக ஆராய்ந்து பார்க்கையில், கலியாணத்தில் காணப்பட்ட இந்த விருந்தாளிகள் அனைவரும் உலகத்தின் புறம்பான இருளிலிருந்து கலியாண அறையின் வெளிச்சத்திற்கு வந்தவர்கள் என்பதையும் நாம் புரிந்துகொண்டோம். அப்படியானால் அவர்களில் ஒருவனை வெளிச்சத்திலிருந்து புறம்பாக்கி, புறம்பான இருளிலே போடுவது என்பது, அப்படிப்பட்டவனிடத்திலிருந்து கலியாண அறையின் வெளிச்சத்தால் அடையாளப்படுத்தப்படும், அறிவும் சந்தோஷமும் எடுக்கப்படுவதைக் குறிக்கும்.

புறம்பான உலகத்தைப் பொறுத்தவரை, முழு உலகமே இருளில், பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்று அப்போஸ்தலன் யோவான் அறிவிக்கிறார் என்பதை நாம் அறிவோம். மணவாட்டி வகுப்பார் நிறைவடைந்தவுடனேயே, மகா உபத்திரவக்காலமொன்று வரும், அது மேசியாவின் இராஜ்யத்துக்கான ஆசீர்வாதங்களுக்காக உலகத்தைத் தயார்ப்படுத்தும் என்பதையும் நாம் அறிவோம். அந்த உபத்திரவத்தின்போது இருளிலிருக்கும் அனைவருக்கும் அழுகையும் பற்கடிப்பும் இருக்கும். அதாவது, தவறான அஸ்திவாரத்தைக் கொண்டிருக்கும் அவர்களின் மனித நம்பிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் பலவற்றை தூக்கியெறிவதோடு தொடர்புடைய – அதிருப்தி, வேதனை, ஏமாற்றம் போன்றவை இருக்கும்.

நமது கர்த்தர், ''அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்'' என்கிற வாக்கியத்துடன் உவமையை நிறைவுசெய்தார். நாம் முன்பு(சத்தியத்தை அறியாதிருந்தபோது) அனுமானித்திருந்ததுபோல், இது தெரிந்துகொள்ளப்பட்ட அந்த சிலருக்கு மாத்திரமே எதிர்காலத்தில் தேவனிடமிருந்து எந்தவொரு தயவும் கிடைக்கும் என்பதையும், எஞ்சியிருக்கும் மனிதர்கள் அனைவரும் நித்தியத்திற்குமாக சித்திரவதை செய்யப்படுவார்கள் என்பதையும் அர்த்தப்படுத்தவில்லை. இந்த ஆதார வசனங்களின் சூழலுக்கு இசைவாக நாம் அதை வாசிக்கவேண்டும். யூத தேசமானது கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தது, ஆனால் ஒரு சில ''உத்தம இஸ்ரயேலரைத்'' தவிர மற்றனைவரும்(அழைப்பை ஏற்று) வராதே போனார்கள். 1800 ஆண்டுகளாக,அந்த செய்தியானது வழிசந்திகளில் சென்றது. ஏறக்குறைய அநேகர் சுவிசேஷயுகத்தின் அழைப்பை கேட்கும்வரை புறஜாதிகளின் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசமாக அந்த செய்தி சென்றது. எனினும் சிலரே சுவிசேஷ யுகத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, தெரிந்துகொள்ளப்பட்ட நிலைக்கு வந்திருக்கின்றனர். இந்த தெரிந்துகொள்ளப்பட்ட நிலைக்கு வருபவர்களிலும், முறையாக மதித்துணராத இன்னும் ஒரு வகுப்பார் இருப்பார்கள், அவர்கள் தள்ளப்படுவார்கள் அல்லது நிராகரிக்கப்படுவார்கள்.

''பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்'' (லூக்கா12 :32) என்று நம் எஜமானர் மீண்டும் கூறி, இந்த விஷயத்தின்மீது கவனத்தை ஈர்த்தார். யூதர்கள் மற்றும் புறஜாதிகள் என இருவரையும் உள்ளடக்கிய சிறுமந்தை வகுப்பார், தங்களுடைய உண்மைத்தன்மையின்மூலம் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக, அவருடைய தெரிந்துகொள்ளப்பட்ட சபையாக, கிறிஸ்துவின் மணவாட்டியாக மாறுவார்கள். பின்னர், பிற்காலத்தில், அவர்களும் அவர்களுடைய கர்த்தரும் சேர்ந்து, தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமை மற்றும் வீழ்ச்சியின்மூலம் இழந்துபோன பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் நற்காரியங்கள் அனைத்தையும் மீட்டெடுப்பதற்கான மகிமைவாய்ந்த வாய்ப்புக்களுடன், தெரிந்துகொள்ளப்படாத அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கான பரமபிதாவின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். ''நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால். ஆபிரகாமின் சந்ததியாராயும் சுதந்திரராயும் இருக்கிறீர்கள்'' – கலாத்தியர் 3:29.

———————

R 5511

# தேவனுடைய ஊழியக்காரருக்கு புத்திமதிகள்

## INSTRUCTIONS FOR GOD'S WORKMEN

**"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" – 2தீமோத்தேயு 2:15.**

சிருஷ்டிகராக, தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்று அறிக்கையிடுகிற ஒவ்வொருவரும், குறிப்பாக, அவரை தங்கள் பிதாவாக ஏற்றுக்கொண்டிருப்பவர்கள், புத்திரர்கள் என்ற விலையேறப்பெற்ற உறவை அவருடன் வைத்திருப்பதாகக் கூறுகின்றவர்கள், தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறுவதையே உயரிய குறிக்கோளாகக் கொண்டிருப்பர். அவருடைய சித்தமே அவர்களுடைய மேலான பிரமாணமாகவும், அவர்களுடைய ஒவ்வொரு மணிநேர அன்றாட இன்பமாகவும், அவருடைய சித்தத்தை அறியவும், அதை செய்யவும் தேடுவதை தங்கள் சிலாக்கியமாகவும் கொண்டிருப்பர். இது கற்றலையும், கருத்தாய் கவனித்தலையும் குறிக்கிறதாயிருக்கிறது. சிந்தனையற்ற வாசிப்பை அல்லது கடமைக்காக செய்யப்படுகிற தொழுகையை குறிக்கவில்லை, மாறாக, அவருடைய சித்தம் என்ன என்று கற்பதற்காக கிடைக்கும் ஒவ்வொரு சமயத்தையும் விழிப்புடன் பயன்படுத்துவதைக் குறிக்கிறது,

அப்.பவுல் தீமோத்தேயுவுக்கு நம் பாடத்தின் ஆதார வசனத்தில் இடம்பெற்றுள்ள ஆலோசனையைக் கொடுத்து, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் (படிக்கிறவனாயும்)" இருக்கவேண்டும் என அவரை வலியுறுத்துகிறார். தேவனுடைய வார்த்தையை கற்பதன்மூலம், அதை சரியாய் பகுத்துப்பார்க்கும் ஆற்றலை அடையலாம் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது. வானியல்(astronomy) குறித்த சத்தியம் ஓரளவு அறிவை நமக்கு அளிக்கக்கூடும், ஆயினும் தங்கள் முழு ஜீவியத்தையும் வானியலுக்காக அர்ப்பணித்திருந்த சிலர், தேவனைக்குறித்த பார்வையை இழந்து, நாத்திகராகியிருக்கின்றனர். தேவனுடைய வார்த்தையினால் வழிகாட்டப்படும் எந்த கற்றலும் உதவிகரமாயிருக்கும், ஆனால் இது தேவனுடைய வெளிப்பாட்டின் தரநிலையிலிருந்து பெறப்பட்டு, கண்ணோக்கப்பட்டு, ஆலோசிக்கப்படவேண்டும்.

ஊழியக்காரன் என்ற வார்த்தை, ஊழியத்தில் ஈடுபடுகின்ற கருத்தை சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்துவின் சபையைச் சார்ந்த அனைவருக்கும் அப்போஸ்தலரின் இந்த உரிமைக்கட்டளை பொருந்துகிறது. நாம் தேவனுடைய ஊழியக்காரர்கள். ஒரு மாபெரும் பணி நடைபெற்றுவருகிறது, உலகிலிருந்து சபை வகுப்பாரை அழைப்பதே இந்த பணியாகும். அழைக்கப்படுகின்ற சபையானது, தேவனுடைய ஆலயம் என்று கூறப்படுகிறது, இந்த "ஜீவக்கற்கள்" செதுக்கப்பட்டு,பளபளப்பாக்கப்பட்டு, கட்டிடத்தில் தங்களுக்கான இடங்களுக்கு ஆயத்தமாக்கப்படுகிறது. நாமே ஊழியக்காரர்கள். தேவனுடைய ராஜ்யத்துக்காக தேவனுடைய பிரசன்னத்துக்காக நாம் நம்மையே ஆயத்தமாக்கத் தேடுகிறோம். இந்த ஆயத்தமாகுதலே நம் முதல் கடமையாகும். நம்மை நாமே ஆயத்தப்படுத்திக்கொண்டு, பிறரையும் ஆயத்தப்படும்படி அவர்களுக்கு உதவவேண்டும்.

### அதிக தோல்விக்கு உண்மையான காரணம்

இந்த ஜீவக்கற்கள் வடிவமைக்கப்படுவது என்பது, அவர்களுடைய குணாதிசயங்களில் வளர்ச்சியடைவதாகும். இவ்வாறு ஈடுபடுபவர், தன் சொந்த இரட்சிப்பை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார். நாம் தேவனுடைய வேலையாட்களாக இருந்து, அந்தப்பணியை நம்முள் செய்துவருகிறோம். ஆனால் நாம் தெய்வீக அங்கீகாரத்தைப் பெற வேண்டுமானால், "பரலோகத்திலிருந்து வருகிற" – தேவனுடைய வசனத்திலிருந்து நாம் கற்றுக்கொள்கிற தெய்வீக ஞானத்தைப் பெற்றிருக்கவேண்டும் –யாக்3 :17.

வெளித்தோற்றத்தில் கிறிஸ்துவர்களாயிருக்கிற பெரும்பாலானோர், இறையியல் கல்லூரிகளில் அநேக வருடங்களை செலவழித்து, சிந்தையை அபிவிருத்திசெய்யக் கொடுத்தபிறகு, தங்களுக்குள் நிறைவேறியிருக்கவேண்டிய கர்த்தருடைய கோட்பாட்டை அடையத்தவறியதையும், பிறருக்கு அதிக நன்மை செய்யத் தவறினதையும் இறுதியில் கண்டடைவர். சத்திய வசனத்தை நன்கு பகுத்து ஆராயத் தவறினதன் விளைவாகவே இந்நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்நாளில் அநேகர் ; கர்த்தாவே கர்த்தாவே, உமது நாமத்தில் அநேக அதிசயிக்கத்தக்க காரியங்களை நாங்கள் ஜெபித்தும், கற்றும், செய்துமிருக்கிறோம் என்பர். அதற்கு கர்த்தர் ; தம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று இவர்களில் சிலரிடம் கூறுவார். அவர்களில் சிலரை சில காலம் அவர் பயன்படுத்தி, அவர்கள் ஒரு ஸ்தானத்தை அடைந்தபோதிலும், மனுஷரை எப்படி பிரியப்படுத்தலாம் அல்லது பெரியளவு வெகுமதிகளையும் மனிதர்களின் கனத்தையும், எப்படி அடைவது என்று

அறிவதைக்காட்டிலும், அவரது சித்தத்தை அறியவும் செய்யவும் ஆர்வத்தோடு தேடுவோருக்கே இந்த விசேஷ ஸ்தானத்தை அவர் அளிக்க விரும்புகிறார். அவரது சித்தத்தை அறிய ஆவலாய்த் தேடுவோரே அவரது சித்தம் அவர்களில் செய்யப்படும் நிச்சயத்தைப் பெற்றிருப்பர்.

**வேத வசனங்களை தவறாகப் பயன்படுத்துதல்**

"சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும்(பார்க்கிறவனாயும்) இரு" என்ற வெளிப்பாடானது, சத்திய வசனம் கற்கப்படவும் கையாளப்படவும் கூடும் என்பதை குறிப்பிடுகிறது. வேத வசனங்கள் பகுத்துப்பார்த்தலிலும் கையாளுவதிலும் அநேக வழிகள் இருப்பதை நாம் காண்கிறோம். நீண்ட காலத்துக்கு முன்பாக பொருந்திய பல வசனங்கள், தற்போது பொருத்தமானதாகவும்,நிலையெதிர்மாறாகவும் குறிப்பிடப் படுகிறது.வருங்காலத்தில்இனி நிறைவேற வேண்டிய வசனங்கள், தற்போது பொருந்துவதாகவும் அல்லது கடந்தகாலத்துக்குரியதாகவும் மேற்கோள்காட்டப்பட்டுள்ளது. அவற்றை எவ்வாறு நிதானமாய் சரியாக பகுத்துப்பார்ப்பது என்பதை அறியாததே பிழை ஏற்பட சாத்தியமாகிறது.

ஆகவே சத்திய வசனத்தை சரியாய்ப் பகுத்துப்பார்ப்பது என்பது, அவைகள் எதற்குரியவைகள் என்று பொருத்தும்ஆற்றலை அடைய ஜெபசிந்தையோடு கற்பதாகும். உதாரணமாக, பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கும், பரிசுத்தஆவியினால் துரித வேகமெடுத்தலுக்கும், ஆவியில் நாம் பிறத்தலுக்கும் இடையேயுள்ள தனித்தன்மைகளை வேறுபடுத்தத் தவறுவோமானால், இவையனைத்தையும் குழப்பிக் கொள்வோமானால், நாம் தீங்கு செய்வோம். பல்வேறு போதனைகளை வெறுமனே காண்பிக்கத்தேடுவது மட்டுமல்ல, பிறருக்கு எதை நாம் கொடுக்கிறோம் என்பதில் தெளிவுள்ளோராயிருக்க தேடவேண்டும். இது ஞானத்தின் ஒரு பகுதியாயுள்ளது. தம்மிடத்தில் கேட்போரை குழப்பும்விதமாக சத்தியத்தின் வேறுபட்ட அம்சங்களை எடுத்துரைத்து, தாங்கள் என்ன விசுவாசிக்கிறோம் என்று அறியாதிருக்கும் நிலை ஏற்படாதபடிக்கு, கிறிஸ்தவ சபையின் ஒரு மூப்பராயிருந்த தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலர் காண்பித்தார். இவ்வாறு யாரொருவர் எந்த போதனையை அவர்களிடத்தில் கொண்டுவந்தாலும், குறிப்பாக, தங்கள் நம்பிக்கையை பரிகாசம் பண்ணும் விதமாக அது இருக்குமானால், நீதியாய் சந்தித்து அதை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராயிருக்க வேண்டும்.

இன்றைய நாளில் இதுவே அநேகருடைய நிலைமையாக இருப்பதாக காணப்படுகிறது. தேவனுக்கு ஊழியம் செய்து வருகிற அல்லது ஊழியம்செய்ய முயற்சிக்கிறவர்களில் அநேகர், ஏற்றவேளையிலான போஜனத்தை கொடுக்காமல், ஆனால் மிக குழப்பமான வழியில் சத்தியங்களை கொடுக்கிறார்கள் என்பது தெளிவாய்த் தெரிகிறது. ஆகவே நாம் "உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு(ஜாக்கிரதையாய்ப் படி)" என்ற அப்போஸ்தலருடைய அறிவுரையை கவனமாக பின்பற்றுவதும், விழிப்பாயிருப்பதும் நமக்குரியதாகியது. மனிதர் என்ன பேசுவார்கள் அல்லது சிந்திப்பார்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ளாதிருந்து, தேவனிடத்தில் முதலாவது அங்கீகாரம்பெறத் தேடவேண்டும்.

பரிசுத்தவான்களின் அங்கீகாரத்தை அடையத்தேடுவதே நமக்கான முறையான காரியமாயிருந்தாலும், தேவனுடைய அங்கீகாரத்துக்கே முன்னுரிமை தரவேண்டும். நாம் ஊழியக்காரராயிருக்க வேண்டும்.செயலற்றவர்களாகவோ, பிறரால் இயக்கப்படுகிற இயந்திரம்போன்றோ இருக்கக்கூடாது. இவர்கள் இராஜ்யத்தில் எந்த ஸ்தானத்தையும் அடையப்போவதில்லை. சாதகமற்ற சூழ்நிலைகளின்கீழ், அவருக்கு மனதார ஊழியம்செய்யத் தேடுவோரையே தற்போது தேவன் ஊழியத்துக்கு அழைக்கிறார். ஆகவே நாம் ஊழியக்காரர்களாக இருக்கவேண்டும், முறையான ஊழியத்தை நாம் கண்டடையவில்லையெனில் தேவன் பயிற்சியளித்துவருகிற இந்தக் கூட்டத்தாரில் நாம் பங்குறெமுடியாது என்பதை நினைவில் நிறுத்துவோமாக. அவருடைய வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டபடி அவரது அங்கீகாரத்தை நாம் அடைய விரும்புவோமானால், அதில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளை நம் பங்கில் நிறைவேற்றுவதை நாம் காணவேண்டும். "ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை... உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்" என்று நமக்கு கற்பிக்கப்பட்டுள்ளது. இக்காரியங்களின்மீது நம் இருதயங்களை வைக்கக்கூடாது. கர்த்தருடைய சித்தம் செய்வதன்மேலேயே நம் இருதயங்கள் வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

அவருக்கு உண்மையுள்ளோராய் இருப்பவர்கள், உலகத்தின் எதிர்ப்பை அடைவார்கள் என்று கர்த்தர் நமக்கு அறிவுறுத்துகிறார். "அவர்கள்என்னை துன்புறுத்தினார்களானால், உங்களையும் துன்புறுத்துவார்கள்". ஆகவே நமக்கு எதிர்ப்பு இல்லையெனில், அவரால் ஏற்றுக்கொள்ளப்படும் இந்த சாட்சியத்தில் நாம் குறைவுபட்டிருக்கிறோம். நாம் சத்திய வசனத்தை சரியாய்ப் பகுத்துப் பார்த்து, அவற்றோடு நம் ஜீவியங்கள் இசைவாயிருப்பதைக் காணவேண்டும். அதேசமயத்தில், நாம் பிறருக்கு தேவ வசனத்தை பகிர்ந்தளிக்கத் தேடவேண்டும். இதனால் அவர்களும் அதே சிலாக்கியங்களையும் ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கமுடியும்.

———————